
உ
சிவமயம்

1. இலக்கியம்
2. எழுத்தியல்
3. பதவியல்
4. புணரியல்
5. பெயரியல்
6. வினையியல்
7. பொதுவியல்
8. இடையியல்
9. உரியியல்



# நவாஞ்சலி

பன்னீருயிரொடு பதினெட்டுடலும்
பதினாறொடு இருநூறுயி ருடலும், ஆய்தமும்
பல்கலையும் கற்றுணர்ந்த பண்டிதரே
பகலவனே பரனடியிற் சாந்தி காண்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ் வடமராட்சி அல்வாயைப் பிறப்பிடமாகவும்
மகாத்மா வீதி, நெல்லியடியை வசிப்பிடமாகக் கொண்டவரும்,
உயர் சைவ வேளாளன் மரபினரும்,
காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, சின்னத்தங்கம் அவர்களின்
சிரேஷ்ட புத்திரனும்,
யோகேஸ்வரியின் அன்புக் கணவருமாகிய

அமரர்

**கணபதிப்பிள்ளை நவரத்தினம்** B.A, M.Phil

**(ஓய்வுநிலை ஆசிரியர்)**

அவர்களின் பிரிவு குறித்த

# நினைவுமலர்

**09.04.2019**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அல்வையூர்த் தங்கத்தின் கருவிலே திருவாகி
ஆழமாய்த் தங்கத் தமிழ் பயின்று
இங்கிதமாய்த் தமிழியலைப் பள்ளிகளிற் போதித்து
ஈன்ற தாய்க்குப் பெருமை சேர்த்து
நல்லதோர் குடும்பத் தலைவனாய், நண்பனாய்
நம்மோடு உறவாடிய நாயகனே
உன் பாதார விந்தங்களுக்கு இம்மலரைக்
காணிக்கையாக்குகிறோம்

– காணிக்கை –

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மலர்வு
08.07.1944

உதிர்வு
08.03.2019

அமரர்

# திரு கணபதிப்பிள்ளை நவரத்தினம் B.A.M.Phil

(ஓய்வு நிலை தமிழாசான்)

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு விளம்பியில் ஆன மாசி மாதத்து
பூர்வபக்கத் துதியையே - மண்விட்டு
நாடறிந்த தமிழாசான் நவரத்தினத்தாரும்
நாதனடி நாடிவிட்ட நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப்பாக்கள்



*திருச்சிற்றம்பலம்*

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தினை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடிபோற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பேசிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தமக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே என் சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலா கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகுங் கழறவுழறி
உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத அன்பு வேண்டிப்பின்
வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்வேண்டும் நான்
மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ்
இருக்க என்றார்

## திருப்புகழ்

உம்பர் தருத்தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
ஏன்றனுயிர்காதரவுற் றருள்வாயே
தம்பி தனக் காகவனத் தணைவோனே
தந்தை வலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கான நிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கணபதிப்பிள்ளை நவரத்தினம் அவர்களின் வாழ்க்கைச் சுவடு

அரியது கேட்கின் வரிவடிவேலோய்
அரிது அரிது மானிடராதலரிது
மானிட ராயினும் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தலரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும், நயத்தலரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தாள் செயலரிது
தானமும் தவமும்தான் செய்வாராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே

என்று இயம்பினார் ஔவையார், ஔவையின் வாக்கிற்கமைய மானிடராய்ப் பிறந்து, ஞானமும் கல்வியும் நயந்து, தானமும் தவமும் செய்யும் தயாளகுணம் படைத்தவர் மிகச் சிலரே, அவர்களில் ஒருவராக அமரர் கணபதிப்பிள்ளை நவரத்தினத்தை அடையாளமிடலாம்.

ஈழ வளநாட்டின் சிரசாயமைந்த யாழ்ப்பாணத்தில் செந்தமிழும், சைவமும் செழித்தோங்கும் வடமராட்சியில் அல்வைப் பதியிலே சீரும், சிறப்புடன் வாழ்ந்த திரு.திருவாட்டி கணபதிப்பிள்ளை, சின்னத்தங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனாக 1944 ஆம் ஆண்டு ஆடி மாதத்து 08ம் நாளன்று திரு நவரத்தினம் அவதரித்தார். இவர் தனது உடன்பிறப்புகளாக கதிரவேற்பிள்ளை, கந்தசபேசன், சாந்தி சாரதாதேவி ஆகியோரிடத்தில் மிகுந்த அன்பும், அக்கறையும் கொண்டவராக இருந்ததுடன் அவர்களுக்கு வழிகாட்டியாகவும் வாழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையிலேயே கல்வியில் மிகுந்த நாட்டமும், தமிழியலில் ஈடுபாடும் உடையவராக இவர் விளங்கினார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மெனிக்டிவெல்ல அரசினர் பாடசாலையிலும் தொடர்ந்து இடைநிலை, உயர்தரக் கல்வியை யா/ நெல்லியடி ம.ம.வித்தியாலயத்திலும் கற்றுப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். பேராதனைப் பல்கலைக் கழகத்திற் கலைமாணிப் பட்டதாரியாக இவர் வெளியேறினார். வெளியேறிய காலப்பகுதியில் உடனடியாக அரசாங்கத்தில் நியமனமேதும் கிடைக்காமையால் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள பல மாணவர்களுக்கு க.பொ.த (சா.த), க.பொ.த (உ.த) வகுப்புக்களுக்கான பாடங்களைப் போதித்தார். அவரிடம் கல்விகற்ற பல மாணவர்கள் க.பொ.த (உ.த) தேர்விற் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்றனர். இக்காலப்பகுதியில் க.பொ.த (உ.த) வகுப்பிற்கு அளவையியல் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டவேளை அதனைப் போதிப்பதற்குரிய ஆசிரியர்கள் குடாநாட்டில் அருந்தலாகக் காணப்பட்டனர். திரு.நவரத்தினம் தானாகவே இப்பாடத்தைக் கற்று குடாநாட்டின் பல பிரதேசங்களில் இதனைப் போதித்துப் புகழ்பெற்றார். இதனால் இவரை "லொஜிக் நவம்" என்றே பலர் அழைத்தனர்.

இக்காலப்பகுதியில் தனது பெற்றோரின் விருப்புக்கமைய மகாத்மா வீதி, நெல்லியடியைச் சேர்ந்த திரு/திருவாட்டி வல்லிபுரம், பொன்னம்மா தம்பதிகளின் மகளான யோகேஸ்வரியை வாழ்க்கைத் துணையாகக் கரம்பிடித்தார். இவர்களது தவப்பயனால் வாணிதாசன், வாணி, வாணிதரன் ஆகிய மூன்று பிள்ளைகள் பிறந்தன. மூத்த புதல்வரான வாணிதாசன் நிதிப்பணிப்பாளராக லண்டனிற் பணியாற்றி வருகிறார். தனது பிள்ளைகள் மூவருக்கும் உரிய காலத்திற் திருமண பந்தத்தில் இணைந்து மகிழ்ச்சியடைந்தார்.

திரு.நவரத்தினம் 1976 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் நாளன்று அநு/கலாவெவ முஸ்லீம் மகா வித்தியாலயத்தில் அரச ஆசிரியராக நியமனம் பெற்றார். சுமார் ஆறுமாத காலம் அப்பாடசாலையிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றிய பின் 26.06.1977 இல் தான் கல்வி கற்ற பாடசாலையான யா/நெல்லியடி ம.ம.வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார். இவ்வாறு இவர் இடமாற்றம் பெற்றமைக்குப் பிரதான காரணம் யாழ் மாவட்டத்தில் க.பொ.த (உ.த) வகுப்பில் அளவையியல் கற்கும் மாணவர்களின் நலனேயாகும். நெல்லியடி ம.மகா வித்தியாலயத்திற் கடமையாற்றிய காலப்பகுதியில் பண்டிதர் வீரகத்தி, பண்டிதர் பொன் கணேசன் ஆகியோருடன் உறவாடியமை குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழியில் திரு நவத்தினம் பாண்டித்தியம் பெறப் பிரதான காரணமாகவிருந்தவர் அமரர் பண்டிதர் வீரகத்தியென்பதில் மறுகருத்திற்கிடமில்லை. இக் காலப்பகுதியில் பல பட்டிமன்றங்களில் இவர் கலந்து கொண்டு மக்கள் மனங்களில் நீங்கா இடம் பெற்றார். சுமார் எட்டு ஆண்டுகள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய பின் 02.09.1985 இல் யா/விக்னேஸ்வரக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றார். இக்காலப்பகுதியில் க.பொ.த உ.த வகுப்பு மாணவர்களுக்குத் தமிழியல், அளவையியல் ஆகிய பாடங்களைப் போதித்துப் பெரும்புகழீட்டினார். அவரிடம் கல்வி கற்ற பல மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றனர்.

சுமார் எட்டு ஆண்டுகள் இப்பாடசாலையிற் கடமையாற்றிய திரு.நவரத்தினம் சுயவிருப்பத்தின் பேரில் யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கு 24.09.1993 இல் இடமாற்றம் பெற்றார். கரவெட்டி பிரதேசத்திலுள்ள ஒரேயொரு மகளிர் பாடசாலையான வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியை வளர்த்தெடுக்க வேண்டுமென்ற குறிக்கோளை அவர் கொண்டிருந்தார். இக் கல்லூரியின் பல்துறை வளர்ச்சிக்காகவும் திரு.நவரத்தினம் ஆற்றிய பணி மகத்துவமானது. சுமார் பதினொரு ஆண்டுகள் இப்பாடசாலையில் ஆசிரியப் பணியாற்றிய திரு.நவரத்தினம் 07.07.2004 அன்று அகவை அறுபதை அடைந்தமையால் அரச பணியிலிருந்து ஓய்வுபெற்றார். அரச பணியிலிருந்து ஓய்வு பெற்ற போதும் தனது இல்லத்தை நாடிவந்த பல மாணவர்களுக்கு அவர் தொடர்ச்சியாகக் கற்பித்து வந்தார். அத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழியலில் முதுகலை மானிப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகள் வருகைதரு விரிவுரையாளராகக் கடமையாற்றினார். ஓய்வு பெற்ற பின்னரும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்தார். இக் கல்லூரியின் விளையாட்டு மைதானத் தேவைக்காக பெருந்தொகை நிதியை இவர் தனது மூத்த மகனிடம் பெற்று வழங்கியிருந்தார். கல்லூரியின் வெள்ளிவிழாவைச் சிறப்பிக்கும் வகையில் வெளியிடப்பட்ட வெள்ளிவிழா மலரின் ஆசிரியராகவும் இவர் செயற்பட்டார்.

கடந்த சில வருடங்களாக முதுமையின் காரணமாக திரு.நவரத்தினம் வீட்டிலிருந்து வெளியிலே வருவதைத் தவிர்த்துக் கொண்டார். தனது பேரப்பிள்ளைகளோடு வீட்டிலே மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தார்.

மனித வாழ்வு நீர்க்குமிழி போன்றதெனக் கூறுவார்கள். திரு.நவரத்தினம் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டவராகக் காணப்பட்டார். சிகிச்சையளித்தும் உரியபலன் கிடைக்கவில்லை. 08.03.2019 அன்று திரு நவரத்தினம் இறையடியில் இணைந்தார்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லாசான் நவத்தாரின் நினைவுகள்...

தோன்றில் புகழுடன் தோன்றுக

அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று

என்பது உலகப் பொதுமொழி இதற்கிணங்க தோன்றிய மனிதர் அமரர் கணபதிப்பிள்ளை நவரட்ணம் அவர்கள் (நவம் Sir) ஓர் நல்ல கணவனாக, நல்ல உறவினனாக, நல்ல சமூகப் பிரஜையாக பிள்ளைகளுக்கு நல்ல அப்பாவாக, நண்பர்களுக்கு நல்ல நண்பனாக, மாணவர்களுக்கு நல்ல ஆசானாக, பல்துறை விற்பன்னராக தோன்றி வாழ்ந்து அமரத்துவம் எய்தினார்.

இளமைக் காலத்தில் எளிமையான வாழ்க்கைச் சூழலில் வாழ்ந்து கற்ற அமரர் பல்கலைக்கழக பட்டதாரியாகி ஆசிரியப் பணியில் ஈடுபட்ட நவம் Sir தன் வாழ்க்கைத் துணையாக யோகேஸ்வரியை கரம்பிடித்தார். வாணிதாசன், வாணிதரன், வாணி என்கின்ற இரண்டு ஆண்பிள்ளைகளுக்கும் ஓர் பெண்பிள்ளைக்கும் நல்ல அப்பாவாக இருந்து அவர்களின் கடமைகளை ஓர் நல்ல தந்தைக்கு ஏற்ற வகையில் நிறைவேற்றினார்.

உண்மை, நன்மை, அழகு என்ற ரூசோவின் கல்விச் சிந்தனைகளுக்கு ஏற்ப தன்னை ஆக்கிக்கொண்ட நவம் Sir தானும் வாழ்ந்து தன்னோடு இணைந்தவர்களையும் அதற்கேற்ப வாழக் கற்றுக் கொடுத்தார். ஆசிரியப் பணியிலே அவர் தமிழ், மெய்யியல், அளவையியலும் விஞ்ஞான முறையும், இந்துநாகரீகம் போன்ற பாடங்களை கற்பிக்கக்கூடிய ஆற்றல் மிகுந்த ஆசானாக விளங்கினார். தனியார் கல்வி நிலையங்களில் அவரின் கற்பித்தல் நுட்பங்களினால் புகழ்பூத்த ஆசிரியராக விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவையியலும் விஞ்ஞான முறையும் என்ற க.பொ.த உயர்தர பிரிவு பாடத்தினை கற்பிப்பதில் அவருக்கேயுரிய தனித்தன்மை உண்டு. ஒரு விடயத்தை விளக்க முற்படுகின்ற போது அது மாணவர்களுக்கு புலப்படாத விதத்தை மாணவர்களின் மனப்பாங்கு வெளிப்பாடு மூலம் அறிந்தபின் அதே விடயத்தை வேறு ஓர் முறையில் ஒப்புவிக்கும் ஆற்றல் மிக்கவர்.

ஆசிரிய மாணவ தொடர்பை, உறவை நல்ல முறையில் பேணுபவர் அவர். நான் 1980 களில் க.பொ.த உயர்தரப் பிரிவில் அளவையியலும் விஞ்ஞான முறையும் என்ற பாடத்தினை கற்றபோது பாடசாலையில் இப் பாடத்திற்கு ஆசிரியர் இல்லாத காரணத்தால் தனியார் கல்வி நிலையத்தில் இவரிடம் கற்று விசேட சித்தியைப் பெற்றேன். அன்றில் இருந்து நவம் Sir எனது மானசீக குருவானார். நான் பல்கலைக்கழகம் சென்ற காலத்தில் கூட அவரிடம் ஆலோசனைகள் பெறுவேன். நான் ஆசிரியப் பணியை பெற்றபோது அவர் கற்பித்த அளவையியல் பாடமே எனது கற்பித்தல் பாடமாகவும் அமைந்தது. இதில் இருந்து எமக்கிடையிலான தொடர்பு, உறவு மேலும் நெருக்கமடைந்தது. என்னை எனது தந்தை வழிநடத்துவது போன்று வழிநடத்துவார். தனக்கு சரியென பட்டதை யார் முன்னிலையிலும் தயங்காமல் எடுத்துரைப்பார். மும்மொழி ஆற்றல் மிக்கவர். கற்பித்தலில் மட்டுமல்லாமல் விடைத்தாள் மதிப்பீட்டிலும் உயர்நிலையில் தனது ஆற்றலை வெளிப்படுத்தியவர். க.பொ.த உயர்தர பிரிவு விடைத்தாள் மதிப்பீட்டு பணியிலே பலகாலம் தொடர்ந்து பங்கெடுத்தார்.

கட்டுப்பாட்டு பரீட்சகர்கள் கூட திக்குமுக்காடும் கேள்விக் கணைகளை மாணவர் சார்பாக தொடுக்கும் வல்லமை மிக்க ஆசான் அவர். ஆரம்பத்திலே விடைத்தாள் பரீட்சகராக இருந்து பின்னர் மேலதிக பிரதம பரீட்சகராக ஓய்வுபெறும் வரை பரீட்சைப் பணியில் ஈடுபட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவையியலும் விஞ்ஞான முறையும் என்ற பாடத்தில் தனது புலமையை வெளிப்படுத்தியதாலும் பல தனியார் கல்வி நிலையங்களிலும் கற்பித்தமையாலும் "Logic நவத்தார்" என செல்லமாக அவரிடம் கற்ற மாணவர்கள் அழைப்பார்கள். "பூவோடு சேர்ந்து நாரும் மணம்வீசும் என்பது போல" நானும் அவரிடம் கற்றதாலும் அவரை எனது மானசீக குருவாக கற்றதாலும் அவருடைய தடங்களில் எனக்கும் சந்தர்ப்பம் கிடைக்க அவர் வழிவகை செய்தார். விடைத்தாள் மதிப்பீட்டு பணிக்காக கப்பலில் விமானத்தில் பயணம் மேற்கொண்ட காலங்களில் ஒன்றாகவே செல்வோம் பரீட்சைப் பணிகளிலும் ஈடுபடுவோம் அவர் ஓய்வு பெற முன்னர் என்னையும் தனது பணிகளில் தேர்ச்சிபெறச் செய்துதான் செய்த பரீட்சைக் கடமைகள் எனக்கும் கிடைக்க வழிசெய்த பெருமகன் ஆவார்.

நவம் Sir க்கே உரிய சில பண்புகள் எம்மவர் மத்தியில் என்றும் நிலைத்திருக்கும். தமிழ் பாரம்பரிய உடை, நிமிர்ந்தபார்வை, சொடுக்கென்ற நடை, மற்றவர்களைக் கவரும் பேச்சு, பேச்சில், கதையில் சிலேடை, சுட்டுப் பெயர்கள் கொண்டு மாணவர்களை அழைக்கும் விதம் என பல அம்சங்களும் அவருக்கே உரிய தனித்தன்மை வாய்ந்தவை ஆகும். பட்டிமன்றங்கள் பேசுவதில் அவரின் தமிழ் ஆற்றல், தர்க்கிக்கும் ஆற்றல் பிரதிபலிக்கும். இந்தவகையில் இலக்கண வருகைநிலை விரிவுரை யாளராகவும் (யாழ் பல்கலைக்கழகம்) விளங்கினார்.

ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற காலத்திலும் தனியார் கல்வி நிலையங்களில் மிடுக்குடன் இறுதிவரை கற்பித்தார். இறுதிவரை அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கிருந்தது. அவரின் மருமகன் செல்வவிநாயகம் சிற்பரன் அவர்கள் எனது கல்லூரியில் ஒன்றாக பணியில் ஈடுபடுபவர். அவரின் மூலம் நிலைமைகளை அறிவேன். இறுதி நாட்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட, ஒரு வாரத்திற்கு முன்னர் அவரது இல்லம் சென்று உரையாடினேன். நோய்நிலைமையிலும் கூட என்னுடன் உரையாடி தனது மூத்த மகளுக்கு என்னை அறிமுகம் செய்து தனக்கும் பொருத்தமான கடந்தகால தொடர்புகளை எடுத்துக் கூறினார். அப்போது கூட தனது கல்விப் பயணத்தின் தன்மைகளை கதையோடு கதையாக கூறினார். பெருமதிப்பிற்குரிய என்ஆசான் நவம் Sir எங்களை விட்டு அகன்றாலும் அவரது நினைவுகள், மாதிரிகள் எம்மைத் தொடரும். அவர் பதித்த தடம் மற்றவர்களால் பின்பற்றப் படுவதால் அவர் வாழ்ந்து கொண்டே இருப்பார்.

மாணவன் :

**தம்பையா கலைச்செல்வன்**

*பிரதி அதிபர்*

*யா/ஹாட்லிக் கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கண வரம்புகளும் தமிழ் இலக்கண இயல்புகளும்

*பேராசிரியர் அ.சண்முகதாஸ்*

இலக்கண வரம்புகள் என்றால் சுற்றி முள்வேலி போடுவது என்ற ஒரு எண்ணமே பலரிடம் ஏற்படுகிறது. வயலுக்கு வரம்பு அமைக்காவிட்டால் நீரெல்லாம் வெளியே வழிந்தோடிவிடும். வரம்பு நீரனைத் தேக்கி வைத்து நெல்லின் வளர்ச்சிக்கு உதவுகின்றது. இதே போலத்தான் மொழி வரம்பும்.

"பெயரில் தோன்றும் பாலறி கிளவியும் வினையில் தோன்றும் பாலறி கிளவியும் மயங்கல் கூடா தம்மரபினவே"

என்னும் தொல்காப்பியச் சூத்திரம் (சொல் கிளவியாக்கம் சூத்.11) தமிழ் மொழியின் சொற்றொடர் ஒழுங்கு பற்றிக் கூறுகின்றது. தொல்காப்பியர் காலந் தொடக்கம் இன்று வரையும் இதே ஒழுங்கு முறையிலேயே நம்முடைய வாக்கிய ஒழுங்கு அமைகின்றது.

ஆங்கில மொழியிலே He Comes என்றும் They Come என்றும் பேசுவதும், எழுதுவதுமே சரியானதாகும். எவராவது They Comes என்றோ He Come என்றோ பேசுவதும் எழுதுவதுமில்லை. இத்தகு இலக்கண இயைபு ஆங்கில மொழியிலே சொற்றொடர் வரம்பாக அமைந்துள்ளது. எவரும் அதனை மீறுவதில்லை. இதே போன்ற இயைபு வரம்பு தமிழ் மொழியிலும் இருக்கின்றது. இதனையே தொல் காப்பியச் சூத்திரமும் (கிளவியாக்கம் : 11) கூறுகின்றது. இன்று இந்த வரம்பினைக் கற்றவரும் மற்றவருமே மீறுவதைக் காண்கிறோம். "பல கூட் டங்கள் நடைபெற்றது" என்றும், நிகழ்ச் சிகள் ஒவ்வொன்றும் நடைபெற்றன" என் றும் எழுதியும், பேசியும் வருகின்றனர். ஆங்கில மொழியினை எழுதும் பொழுதும், பேசும் பொழுதும் இலகுவாக மீறுகின்றார்கள். இதற்காகத்தான் இவ்விலக்கண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம்பினை மீறக்கூடாது என்று இளவயதிலே பிள்ளைகளுக்குக் கற்பிக்கவேண்டியுள்ளது.

பேச்சு வழக்கினை சிறுகதை, நாவல், நாடகம், கவிதை ஆகியவற்றிலே கையாண்டு இலக்கியங்கள் படைக்கத் தொடங்கிய போது, இவ்வாறு இலக்கியங்கள் படைப்போர் இலக்கண வரம்பினை மீறு வோரென உயர் இலக்கிய நூல் வல்லாராலே கூறப்பட்டது. நம்முடைய மொழி இரு வழக்குப் பண்புடையது. பேச்சு வழக்கினைச் சில சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தி வருகின்றோம். இன்றைய இலக்கியங்களைப் படிக்க பேச்சுவழக்கு வேண்டியுள்ளது. இவ்வழக்கைப் பிள்ளைகளுக்குத் தனியாகக் கற்பிக்க வேண்டியதில்லை. அது அவர்கள் இயற்கையாகவே அறிகின்ற மொழி. ஆனால் நம்முடைய மொழியிலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட செம்மொழி இலக்கியங்கள் இருக்கின்றன. அவற்றை நம்முடைய பிள்ளைகள் படித்து இரசிப்பதற்கு இலக்கிய வழக்கினை அவர்கள் அறியவேண்டிய அவசியமுண்டு.

இதனால் பண்டைத் தமிழ் இலக்கணப் பயிற்சி பெறவேண்டிய தேவை ஏற்படுகின்றது. மேலும் இன்றும் அன்றிலிருந்து வரும் செந்தமிழ் அமைப்புள்ள மொழியினையே பேசுகின்றோம். சொற்கள் வடிவம், ஒலிகள், சிற்சில இடங்களில் வேறுபடலாம். ஆனால் அமைப்பு ஒன்றாகவே உள்ளது. எனவே பண்டைய மொழி இயல்புகளைக் கூறும் நம்முடைய இலக்கண நூல்கள் கூறும் இலக்கண வரம்புகளை நாம் நமது நல்ல தேவைகளுக்காகப் பேண வேண்டியுள்ளது.

தமிழில் இலக்கியமொழி – பேச்சு மொழி வேறுபாடு

மொழிக்கல்வி என்பது நமக்கு தமிழ் இலக்கண இலக்கியக் கல்வியாகவே அமையும். ஆனால் மேலைத் தேயத்தில் அது தனியே மொழி இலக்கணக் கல்வியாகவே அமையும். அவர்களுக்கு இலக்கியமொழி, பேச்சுமொழி என்ற வேறுபாடு கிடையாது. இலக்கண அமைப்புக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டுகள் தேடி இலக்கியங்களுக்கு செல்லவேண்டிய தேவை இல்லை. ஆனால் தமிழ் மொழியிலோ, இலக்கிய மொழி, பேச்சு மொழி என இரு வேறுபட்ட வழக்குகள் உள. மொழி அமைப்புக்கு பேச்சுவழக்கில் இருந்தும் எடுத்துக் காட்டுக் கொடுக்கும் அதேவேளை, இலக்கிய வழக்கில் இருந்தும் எடுத்துக் காட்டுத் தரவேண்டியுள்ளது. இவ்வாறான வேறுபாடுகள் இருப்பினும் சில மொழி அமைப்புகள் சொற்றொடர்கள் ஆகியன இலக்கிய வழக்கென்றாலும், பேச்சு வழக்கென்றாலும் இலக்கண வரம்பு பேணவேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக "குயில் கூவிற்று" என்றோ, "குயில் கூவிச்சு என்றோ கூறினாலும் இவை இலக்கண வரம்பினைப் பேணுகின்றன. ஆனால் "குயில் கரைகின்றது" என்றோ, குயில் கரையுது" என்றோ கூறினால் அவை இலக்கண வரம்பினை மீறுவனவாக அமைகின்றன. இலக்கணக் கல்வியில் இவ்விடயத்திலே நாம் கவனம் செலுத்த வேண்டும்.

**புணர்ச்சி விதிகள்**

தமிழ் மொழியில் இலக்கணம் தொடர்பாக புணர்ச்சி விதிகள் ஒரு வகையில் இலக்கண வரம்புகளாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக "சேதா" என்ற சொற்றொடர் "செம்மை + ஆ" எனப் பிரித்துக் காட்டி, மையீற்றுச் சொற்களின் மாற்றங்களுக்குக் கூறப்பட்ட விதிகளுக்கேற்பப் புணர்த்திக் காட்டலாம். சிறிய பகுதிகளாக உள்ள மொழிக் கூறுகள் பல விதிகளின் பிரயோகத்தினால் முழுமையடைகின்றன என மொழியியலூடாக அறிகிறோம். மையீற்றுச் சொற் புணர்ச்சிகளும் அவ்வாறே நடைபெறுகின்றன. "சேதா" வைப் பார்ப்போம்.

(நன்னூல் சூத். 136)
செம்மை + ஆ
சேம் + ஆ      விதி 1 : ஈறு போதல்

சேம் + ஆ      விதி 2 : இடையகரம் இ ஆதல்.
(இவ்விதி பிரயோகிக்கப்படவில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சேம் + ஆ | | விதி 3 : ஆதி நீடல்<br>செம் சேம் |
| சேம் + ஆ | | விதி 4 : அடியகரம் ஐ ஆதல்<br>(இவ்விதி பரயோகிக்கப்படவில்லை) |
| சேம் + ஆ | | விதி 5 : தன்னொற்றிரட்டல்<br>(இவ்விதி பிரயோகிக்கப்பட வில்லை) |
| சேம் + ஆ | | விதி 6 : முன்னின்ற மெய் திரிதல். மகரம் தகரமாகத் திரிகின்றது.<br>சேம் சேத் ஆகின்றது |
| சேம் ஆ | | விதி 7 : இனமிகல்<br>(இவ்விதி பிரயோகிக்கப் படவில்லை) |

= சேதா

மொழியினுடைய இயல்புகளை அவதானித்து அவற்றினுடைய இயல்பான போக்குகளையே தமிழ் இலக்கண நூலார் விதிகளாகக் கூறியுள்ளார். அவை விதி முறைகள் அமைக்க வேண்டும் என அமைக்கப்பட்ட சூத்திரங்கள் அல்ல. எண் கணிதத்தில் விதிகள் அமைந்திருப்பன போன்றன.

## தமிழ் எழுத்துக்களின் உச்சரிப்பு

இலக்கண வரம்பினை இறுக்கமாகப் பேணவேண்டுமென்பதற்கு இன்னொரு விடயத்தினை நோக்கலாம். தொல்காப்பியர் அவரைப் பின்பற்றி நன்னூலார் தமிழ் எழுத்துக்களின் உச்சரிப்பினை மிகத் தெளிவாகக் கூறி யுள்ளனர். தமிழில் மூன்று பிரிவழி ஒலிகள் இருக்கின்றன. அவை:ல் ழ், ள் ஆகிய மூன்றுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுனி நா நுனி அண்ணம் வருட
ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்

(பிறப்பியல் 13)

"நா விளிம்பு வீங்கி அண்பல் முதல் உற
ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்
லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்"

(பிறப்பியல்:14)

மேற்படி சூத்திரங்கள் முறையே ழ், ல், ள. ஆகியன பிறக்கும் முறையினைக் கூறுகின்றன. இவற்றுள் பெரும்பாலான தமிழ் பேசும் இடங்களிலெல்லாம் ழ், ள் என்பன ள் என்றே ஒலிக்கின்றன. வாழ், வாள் என்பன வாள் என்றே உச்சரிக்கப்படுகின்றன. இதனால் இவற்றை எழுதும் போதும் ஒரே எழுத்தினால் எழுதிவிட்டு சந்தர்ப்பம் நோக்கிப் பொருள் கொள்ளலாமே எனச் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். ஆங்கில Meat / meet என்னும் சொற்களை meet என்று மட்டும் எழுதிவிட்டு சந்தர்ப்பம் நோக்கி அது "இறைச்சி" யைக் குறிக்கும் meat அல்லது "சந்தித்தல்" குறிக்கும் meet எனக் கொள்ளலாம் என யாரும் அபிப்பிராயம் கூறினால் ஆங்கிலேயர் ஏற்றுக்கொள்வார்களோ? தமிழ் ழ், ல், ள தொடர்பாக நாம் எவ்வித விட்டுக் கொடுப்பும் செய்ய வேண்டியதே இல்லை. மாணவர்களுக்கு அம்மூன்று எழுத்துக்களையும் பயிற்றுவதுடன்,பண்டைக் காலந் தொடக்கம் இம்மூன்று எழுத்துக்களாலமைந்த சொற்களையும் பயிற்ற வேண்டும்.

## நிறைவுரை

உலகத்திலேயுள்ள சில மொழிகளைப் போல தமிழ் மொழியும் இரு வழக்குப் பண்புடைய மொழி என்பதை நன்குணராத மேலைத்தேயத்தவர் சிலர் தமிழ் மொழியைக் கற்பது சிரமமானது எனக் குறிப்பிட்டுள்ளனர். நம்மவர்கள் சிலரும் தமிழ் இலக்கணக் கல்வி கடினமானது என்று கூறிவந்துள்ளனர். பழந்தமிழ் இலக்கியங்களைப் படிக்காமலும் பழந்தமிழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி இலக்கணப் பயிற்சி பெறாமலும் ஆக்க இலக்கியம் படைத்வர்கள் தம்முடைய ஆக்கங்களை பழந்தமிழ் வல்லுநர் குறை கூறிய பொழுது பழந்தமிழ் இலக்கணப் பயிற்சி வேண்டியதில்லை. என்னும் வாதத்தினை முன்வைக்கத் தொடங்கினர். இன்று அது இன்னும் கூர்மை பெற்றுள்ளது. தமிழைப் பிழையாக எழுதவும், பேசவும் முடியும் என்ற நிலைக்குக் கூடச் செல்கின்றது. தமிழ் இலக்கணம் பல வரம்புகளைக் கட்டியுள்ளது. இது தமிழ் வளர்ச்சிக்கு தடையாயுள்ளது என்று வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. எமதுஅருமையான பழந்தமிழ் இலக்கியங்கள் இரண்டாயிரம் ஆண்டுச்சுமை என்றுகூடச் சொல்லப்பட்டன. ஆனால் தமிழ்மொழி இது போன்ற பல அச்சுறுத்தல்களைக் காலத்துக்குக் காலம் எதிர்கொண்டு வந்த மொழி. தமிழ் இலக்கண வரம்புகள் மீறப்படவேண்டிய தேவையும் இல்லை. புதிய வளர்ச்சியை நாம் தடைசெய்யவேண்டியதும் இல்லை. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்று இலக்கண ஆணையும் உண்டு.

*நன்றி : மகிழம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் தினமும் ஆசிரியப் பணியின் மகிமையும்

*திரு.ஆ.நித்திலவர்மன்*

*விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்*

ஆசிரியர் தினம் என்பது கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் பல்வேறு நாடுகளில் பல்வேறு நாட்களில் கொண்டாடப்படுகின்றது. சில நாடுகளில் விடுமுறை நாளாகவும், ஏனைய நாடுகளில் வேலை நாளாகவும் உள்ளது. இந்தியாவில் முன்னாள் ஜனாதிபதி சர்பவள்ளி இராதாகிருஸ்ணனின் பிறந்த நாளான செப்ரெம்பர் 5ந் திகதி ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகின்றது. ஓர் ஆசிரியரான அவர், தனது நண்பர்களும் மாணவர்களும் தனது பிறந்தநாளை கொண்டாடவேண்டும் என விரும்பிய போது, அந்நாளை ஆசிரியர் தினமாக கொண்டாடுமாறு வேண்டுகோள் விடுத்தார். அவரின் வேண்டுகோளுக்கு இணங்க 1962 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தியாவில் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இலங்கையில் ஒக்ரோபர் 6 ஆம் திகதி ஆசிரியர் தினமாக அனுஸ்டிக்கப்பட்டு வருகின்றது. ஆசிரியர் தினத்தில் பாடசாலைகள், முன்பள்ளிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். மாணவர்கள் தமக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மலர்மாலையிட்டு, இனிப்புக்கள் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கி ஆசீர்வாதம் பெற்றுக் கொள்கின்றனர். ஆண்டு தோறும் ஆசிரியர் தினத்தன்று இலங்கை மழுவதும் கல்வித் துறையில் சிறப்பாக பணியாற்றிய ஆசிரியர்கள், அதிபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு விருது வழங்கப்படுகின்றது. இப் பொன்னான நாளில் ஆசிரியப் பணியின் சிறப்புப் பற்றி சிந்தித்துப் பார்ப்பது பொருத்தமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவறையில் இருந்து வெளிவரும் ஒரு குழந்தைக்கு தாய் உலகை அடையாளம் காட்டுகின்றாள். அந்த உலகைப் புரிந்து பண்பட்டவனாய் வாழும் கலையை ஆசிரியர்கள்தான் அந்தக் குழந்தைக்கு செவ்வனே கற்றுக் கொடுத்து மனிதனாக மாற்றும் வேலையைச் செய்கிறார்கள்.

ஒவ்வொரு நாட்டின் எதிர்காலத் தலைவிதியும் அந்த நாட்டின் வகுப்பறைகளில் தான் எழுதப்படுகின்றது. உலகம் இன்றுவரை பல்துறைசார் அறிஞர்களைப் பெற்றுக் கொண்டிருக்கின்றதென்றால் அதற்குக் காரணம் சிறந்த ஆசிரியர்கள்தான். ஒரு மனிதனை அவனுக்கே அடையாளம் காட்டுபவராக இருப்பதுதான் ஆசிரியரின் சிறப்புக்களில் மிகவும் பிரதானமாக உள்ளது. மேலும் மாணவ சமூகத்திற்குத் தேவையான ஆற்றல், ஊக்கம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி என்று அனைத்தையும் ஒன்றுசேரக் கொடுத்து அவனை நல்லவனாக, பண்புள்ளவனாக, அறிஞனாக, மேதையாக சமூகத்தின் உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்லும் உயரிய பொறுப்பு ஆசிரியரின் சிறப்பாகும்.

ஒரு சமூகம் அதி உன்னதநிலை அடைந்து இருந்தால், நிச்சயமாக அதன் பின்னால் ஆசிரியர் சமூகம் இருப்பதாக அர்த்தம். ஒரு சமூகம் தாழ்ந்து போனால் ஆசிரியர் சமூகம் தனக்கான பணியை சரிவரச் செய்திடவில்லை என அர்த்தம். வேறு எந்தத் துறையை விடவும் அதிக பொறுப்புக்களும், அதிக முக்கியத்துவமும் நிறைந்தது அவர்களின் பயணம்.

கல்வியைக் கற்பிப்பது மட்டுமன்றி கொள்கைகள், மற்றையவர்களிடம் பழகும் விதம் உள்ளிட்ட விடயங்களையும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் போதிக்கின்றனர். மாணவர்களின் நண்பராக, போதனையாளராக, வழிகாட்டியாக ஆசிரியர்கள் விளங்குகின்றனர். இன்றைய சமூதாயத்திற்கு முன்னுதாரணமாக அவர்கள் இருக்கின்றனர். "அன்னையும் தந்தையும் ஒரு குழந்தையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிற்கு தருகின்றனர். ஆனால் ஒரு ஆசிரியன் உலகத்தையே குழந்தைக்கு தருகின்றான்" என்று தமிழ் சிறப்புப்பாயிரம் ஒன்று கூறுகின்றது.

ஆசிரியர்களுடைய பணியின் மதிப்பு அளவிடப்பட முடியாதது. ஏனெனில் ஒரு மனிதனை மனிதனென்று அடையாளப்படுத்துவது, மிருகங்களை மீறிய சிறப்புப் பண்புக் கூறுதான். அந்த சிறப்புப் பண்புக் கூறு சிறந்த கல்வியின் மூலமே கிடைக்கின்றது. அந்தச் சிறந்த கல்வியை அளிக்கும் மாபெரும் பணி ஆசிரியர்களைச் சார்ந்துள்ளது. ஏனெனில் ஆசிரியர்கள் உருவாக்கும் மாணவச் சமூகமானது ஒரு நாட்டின் எதிர்காலத்தையே தீர்மானிக்கின்றது. அனைத்து மக்களின் நல்வாழ்வும் அந்த சமூகத்தின் கைகளில்தான் உள்ளது. எனவே இந்த இடத்தில் ஆசிரியர் என்பவரின் பணியானது அனைத்தையும் விட உயர்ந்து நிற்கின்றது.

"எங்கே நடப்படுகிறாயோ அங்கே மலராகு" என்ற பொன்மொழிக்கு எடுத்துக்காட்டாய் இருப்பவர்கள் ஆசிரியர்கள்தான். தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவர்களை வாழ்க்கை என்றால் என்ன? இதில் மாணவ சமுதாயத்தின் பங்கு எப்படியிருக்க வேண்டும் என்று ஒரு தெளிவை ஆசிரியர்கள்தான் கற்றுக் கொடுக்கின்றார்கள். குறிக்கோள் தவறிய வாழ்க்கை முகவரியில்லாத கடிதத்திற்கு சமம். இது போலத்தான் மாணவ சமுதாயமும் - குறிக்கோள், இலட்சியம் இல்லாமல் இருந்தால் எதிர்காலம் ஓர் இருண்டபாதை என்பதை ஆரம்ப பருவத்தில் இருந்தே மாணவர் மனதில் நன்கு பதியவைத்து, அதன் மூலம் கிடைக்கும் வெற்றியைப் பார்க்கும் போது ஆசிரியர்களின் முகத்தில் ஒரு மகிழ்ச்சி தோன்றும். இதனை சொல்வதை விட உணர்வுபூர்வமாக உணர முடியும்.

தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவனை நல்ல மாணவனாக ஆக்குவதோடு, நல்ல மனிதனாக மாற்றும் பொறுப்பும் ஆசிரியர்களுக்கு இருக்கின்றது. அதேபோல ஆசிரியர்கள் என்பவர்கள் மாணவ சமூகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குபவர்கள் அல்லர். மாறாக உயிரூட்டுபவர்கள். ஒரு சிறந்த ஆசிரியரின் பண்புகள், குணாங்களைப் பார்க்கும் மாணவ மாணவிகளின் மனதில் அப்படியே பதியும். அதனால் ஆசிரியர்கள் தங்களை மாணவர்களின் காலக் கண்ணாடி எண்ணத்தில்தான் பணியாற்றி வருகின்றனர். அப்படி பணியாற்றுவதன் மூலம் கடினமாக உழைத்து வாழ்வில் ஒளிரும் மாணவ சமூகத்திற்கு ஆசிரியர்கள் உரிமையாளர்களாக மாறுகின்றனர்.

பிற பணிகளில் இல்லாதது, ஆசிரியர் பணியில் இருக்கின்றது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்றுதான் சொல்கிறோம். மாதா, பிதா, வைத்தியர், பொறியியலாளர் என்று சொல்வதில்லை. மனிதனை மனிதனாக உருவாக்கும் சிற்பிகள் என்று ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகளைச் சொல்வதுண்டு. மனிதனை முதன்மைப்படுத்த உரமாக இருப்பவர்கள் ஆசிரியர்கள் என்றால் அது மிகையாகாது. மொத்தத்தில் இறந்த பின்னரும் மண்ணில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் வரிசையில் ஆசிரியர்களுக்கு முதலிடமுண்டு என்பது ஒரு யதார்த்த உண்மை.

சீரிய சிந்தனைகளோடு கூரிய அறிவாற்றல் திறனைப் பயன்படுத்தும் குழந்தைகளுக்கு, இளைஞர்களுக்கும் கல்விச் செல்வத்தை வழங்கி வரும் ஆசிரியப் பெருமக்கள் அனைவரது வாழ்விலும் வளம் செழித்து நலம் பெருகிட எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்போம்.

*நன்றி : மகிழம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர உயர்மட்டப் பரீட்சையில் தமிழ்ப் பாடத்துக்கு வேண்டும் அறிவாழமும் அதற்கான பாடத்திட்டமும்

*பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி*

## I

கற்பித்தல் முறைமையில் மாணவர்கள் ஒவ்வொரு வகுப்பு நிலையிலும் தாம் படிக்கும் பாடங்களில் எத்துணை அறிவுடையோ ராயிருத்தல் வேண்டுமென்ற ஒரு பொது வரையறை எதிர்பார்ப்பு உண்டு. மாணவர்களின் வயதுமட்டம் பாடம் பற்றிய அறிநிலை எதிர்பார்ப்பு ஆகியவற்றினடிப்படையில் இந்தக் கணிப்பீடு செய்யப்படுகின்றதென கல்வியியலாளர் கூறுவர்.

இது ஒவ்வொரு வகுப்பு மட்டத்திலும் பார்க்கப்படத்தக்கதெனினும் மாணவரின் கல்வி வளர்ச்சிக்கான முக்கிய சட்ட நிலைகளில் இது மிக உன்னிப்பாக நோக்கப்படும். உதாரணமாக க.பொ.த. சாதாரண மட்டத்திலே தேர்ச்சியடைந்துள்ள மாணவரிடத்திற் கணிதம், இரசாயனம் போன்ற பாடங்களில் எத்தகைய அறிவு இருத்தல் வேண்டுமென்பது பற்றிய தெளிவான கருத்துக்களிருப்பது நமக்குத் தெரிந்ததே. கற்றல் முறை வழியில் மாணவரின் வளர்ச்சியின் தீர்க்கமான சட்ட நிலைகளாக அமையும் மட்டங்களில் இந்த அறிவளவு அறிகை ஆழம் என்பன எத்தகையன வாகவிருத்தல் வேண்டுமென்பது கல்வி பயிற்றலில் முக்கிய நியமமாகும்.

இந்தப் பின்புலத்தில் தமிழை முதல் மொழியாகப் பயிலும் கற்கை நெறியில் க.பொ.த. சாதாரண மட்டத்தில் தேர்ச்சி பெறும் ஒவ்வொரு மாணவனிடத்துமிருக்க வேண்டிய தமிழறிவின் மட்டம் பற்றிய எதிர்பார்ப்புக்கள் யாவை என்பது முக்கியமானதொரு வினாவாகும். க.பொ.த. சாதாரண மட்டத்தில் தமிழ்ப் பயில்வுக்கான கல்வி இலக்குகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றுவதற்கான மொழியறிவு எத்தகையதாக இருத்தல் வேண்டும் என்பது பற்றிய தெளிவு ஐயந்திரிபறச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளதாகக் கொள்ள முடியாது. இதனைச் சற்று விளக்கமாகக் கூறுதல் வேண்டும். அதாவது க.பொ.த. சாதாரண மட்டத்தில் மாணவர் பெற்றிருக்க வேண்டிய மொழிப் பயில்வுத் தேர்ச்சி எந்த அளவினது என்பது பற்றி ஒரு தெளிவிருப்பதாகத் தெரியவில்லை எதிர்பார்க்கப்பெறும் ஆற்றல்களை ஈட்டுவதற்கான மொழியறிவும் மொழித் தேர்ச்சிகளும் யாவை என்பவை பற்றி தெளிவும் இருப்பதாகத் தெரியவில்லை. குறிப்பாக கூறுவதானால் க.பொ.த. சித்தியெய்திய மாணவரிடத்து இருக்க வேண்டிய இலக்கண அறிவுத் தெளிவு எம்மட்டத்தினதாதல் வேண்டும் என்பது பற்றிய தெளிவும் விளக்கமும் இல்லை.

குறித்தவொரு மொழிப் பயில்வுத் தேர்ச்சிக்குப் பின்புலமாக அமையும் மொழியமைப்பு மொழிக்கையாளுகை அறிகை பற்றிய வற்புறுத்துதல் அவசியமாகும்.

## II

மேலே கூறிய பிரச்சினை க.பொ.த. உயர்மட்டத்துக்கு வரும்போது மிக முக்கியமானதாக மேற்கிளம்புகிறது. இந்த விடயம் பற்றிச் சற்று உன்னிப்பாக நோக்குதல் வேண்டும். க.பொ.த. சாதாரண மட்டமென்பது இரண்டாம் நிலைக் கல்வியின் (Secondary Education) நிறைவு நிலையமாகும். அதாவது இந்திய எடுத்துரைப்பு நிலையிலே கூறினால் முதல் பத்து வருடகால கல்விப் பயில்வின் ($10^+$) நிறைவாகும். இந்நிலை வரை மாணவர் பாடசாலைகளைப் பற்றிய நுண்பயில்வினைத் தொடங்காது அத்தியாவசியப் பாடங்களைத் தொகுதிநிலையாகப் பயிலும் நிலையாகும். இது ஏறத்தாழ 16 வயதுவரை நடப்பதாகும்.

இலங்கையில் இரண்டாம் நிலைக்கல்வி முடிந்து மூன்றாம் நிலைக் கல்விக்கான (Territary Education) தொடக்கமாக க.பொ.த. உயர்மட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையைக் கொள்ள வேண்டும். இந்த மட்டத்திலே தான் ஒவ்வொரு பாடங்களிலும் (Subjects) வரும் விடயப்பொருட்கள் யாவை என்பதை அறிந்து கொள்ளுதல் தொடங்குகிறது. இன்றைய நிலையில் இலங்கையில் மூன்றாம் கட்டக்கல்வி பயில்வதற்கான தேர்வு (உண்மையில் தெரிவு) இந்த மட்டத்திலேயே நிகழ்கிறது. இது இந்தியக் கல்வியியலாளர் கூறும் + 2 இற்குச் சமமானதாகும். அதன் முடிவிலேயே மாணவர்கள் உயர்கல்வி (Higher Education), தொழில்நுட்பக் கல்வி (Technical Education) என்பவற்றுக்கு தம்மை திசைமுகப்படுத்திக் கொள்கின்றனர். இதிலுள்ள முக்கியத்துவம் யாதெனில் இந்த மட்டத்திலேயே ஒவ்வொரு பாடங்களினதும் தனித்தனி விடயப்பொருட்கள் பயிலப்படுகின்றன. அதாவது இந்த மட்டத்தில் பொதுவே இரசாயனம், சமூகக்கல்வி என்று சொல்லப்படாமல் தாவரவியல், விலங்கியல் தூய கணிதம், பிரயோக கணிதம் ஆட்சியியல், வரலாறு, சமூகவியல் என தனித்தனி பாடங்களிடம் பெறும் விடயப்பொருட்கள் மாணவருக்கு அறிமுகஞ் செய்து வைக்கப்படுகின்றன.

இத்தகையதொரு கல்வியியல் நோக்குப் பின்புலத்திலேயே தமிழும் "தனிப்பாடமாக" அறிமுகம் செய்யப்படுகிறது. இந்நிலையில் நாம் மிகமுக்கியமானதொரு வினாவை எதிர்நோக்க வேண்டியவர் களாகின்றோம். அதாவது தமிழ் எனும் பாடம் பற்றி, அதனை தனியொரு பாடமாக அறிந்து கொள்வதற்கு எவ்வெவ்விடயங்கள் பற்றி அறிதல் வேண்டும்? இது ஒரு முக்கியமான வினாவாகும்.

## III

இந்த வினாவினை எதிர்கொள்ளும் போது இதனூடாக இக்கற்கை முறை பற்றிய இன்னொரு முக்கிய விடயமும் மேற்கிளம்புகிறது. அதனை பின்வருமாறு எடுத்துக்கொள்ளலாம். உயர்மட்டத்தில் ஒரு மொழியைக் கற்க முனையும் பொழுது எவ்வெவ் விடயங்கள் முக்கியமாகின்றன என்பதாகும். முதலாவதாக முக்கியத்துவம் பெறுவது, அம்மொழியின் கையாளுகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். அதாவது அம்மொழியினூடாக கருத்துக்களை, உணர்வுகளை தெரிவிப்பதற்கு வேண்டிய அன்றேல் கிரகித்துக் கொள்ளவேண்டிய அறிவு இருத்தலாகும். இதனை இன்னொரு வகையாகவும் கூறலாம். அம்மொழியின் தொடர்பியற் சாத்தியப்பாடுகள் பற்றிய அம்மொழிநிலை நின்ற ஆக்குநிலைத் திறன்கள் (Compositional Capabilities) பற்றிய திறனும் பரிச்சயமும் வேண்டும். இரண்டாவதாக அம்மொழியின் அமைப்பு, ஆக்கவளம் பற்றி அறிந்து கொள்ளுதலாகும். இவற்றின் முக்கியத்துவம் காரணமாக இவற்றினை நிரற்படுத்துதல் அவசியமாகும்.

1. ஆக்குதிறன்
2. ஆக்குதிறனைக் கண்டறிதல்
3. மொழியின் அமைப்பு
4. மொழியின் ஆக்கவளம்

இவை எந்தவொரு மொழி பற்றிய மேல்நிலை அறிவுக்கான தொடக்கமாகும்.

## IV

மூன்றாவது கல்வி நிலையின் தொடக்கத்தில் ஒரு மொழி பற்றிய அறிவாழ எதிர்பார்ப்பு. அதுவும் தாய்மொழியாகவுள்ள மொழி பற்றிய தனிநிலை அறிமுகம் எத்தகையனதாகவிருத்தல் வேண்டுமென்பது பற்றி ஆராயத் தொடங்கும் பொழுது இலங்கை நிலையில் இம்மட்டத்தில் நிலவும் ஒரு பொதுப்படையான கருத்துப் பற்றி எடுத்துக் கூறல் வேண்டும். அதாவது க.பொ.த. உயர்மட்டக் கற்பித்தலும் மதிப்பிடுகையும் அப்பாடம் பற்றிய பல்கலைக்கழகப் புகுநிலைக்கான ஆற்றுப்படுத்தலேயாகுமென்றே மேற்கொள்ளப்படுவது மரபாகியுள்ளது. க.பொ.த. உயர்மட்டப் பரீட்சை ஏற்படுத்தப்படுவதன் முன்னர் இக்கல்வி மட்டத்தை உயர்பாடசாலை அத்தாட்சிப் பத்திரமும் பல்கலைக் கழகப் புகுமுகப் பரீட்சையுமென்றே (High School Certificate (HSC) & University Entrance Examination) கொள்ளப்பட்டு வந்தது. உண்மையில் உயர் பாடசாலை அத்தாட்சிப் பத்திர பெறுபேறுகளின் அடிப்படையிலேயே அந்நாட்களிற் பல்கலைக் கழகத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1959ம் ஆண்டு வரை இலங்கையில் ஒரேயொரு பல்கலைக் கழகமே இருந்து வந்தது) மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். அம்முறைமை தொழிநுட்ப காலத்தில் நான்கு பாடங்களுக்குக் குறைவாக சித்தியடைந்தோர் பல்கலைக் கழகப் புகுமுகத்திற்காக நேர்காணற் பரீட்சை ஒன்றிற்குச் செல்ல வேண்டியிருந்தது.

இப்பொழுது இந்நிலை மாறியுள்ளது. இந்த மாற்றத்தில் இரண்டு அம்சங்கள் முக்கியத்துவமானவையாகும்.

முதலாவது, கல்விப் பொதுத் தராதர உயர்மட்டப் பரீட்சை பல்கலைக் கழகப் புகுமுகத்திற்கு மாத்திரமல்லாமல் தொழிற்துறை புகுமுகத்திற்குமான அடிப்படைக் கல்வி நிலையாகவும் கொள்ளப்படுகின்றது. ஆசிரியர் கல்லூரிகள், தாதிமார், கல்லூரிகள், மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆகியனவற்றிலும் இதுவே புகுமுகத் தகுதிக்குரிய பரீட்சையாகவுள்ளது. இதனிலும் பார்க்க முக்கியமான விடயம் யாதெனில் க.பொ.த. உயர்மட்டப் பரீட்சையிற் சித்தியெய்துபவர்களுள் 6 சதவீதத்தினரே பல்கலைக் கழகங்களினுள் சேர்க்கப்படுகின்றனர். அதாவது பல்கலைக் கழகக் கல்வி நிலைக்குத் தகுதியானவர்களென்று கருதப்படுபவர்களுள் 6 சதவீதத்தினரே பல்கலைக்கழகங்களிலே சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர்.

இவ்வுண்மை தமிழ்ப் பாடம் பற்றிய சில முக்கியமான கல்வி நிலைப் பிரச்சினைகளை கிளப்புகின்றது. முதலாவது இது முதல் மொழிநிலைத் தேர்வாகும். அதாவது தமிழை தமது சகல விதமான தொடர்பாடல்களுக்கும் முதலாவது மொழியாகக் கொள்பவர்களுக்கான பரீட்சையாகும்.

இதுவொரு முக்கிய நிலை இதனைசச் சற்று விளக்கமாக நோக்க வேண்டும். இது தமிழை இரண்டாம் மொழியாகக் கொள்பவர்களுக்கான பரீட்சையன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு வகையிற் கூறினால் இப்பரீட்சார்த்திகளிடம் எதிர்பார்க்கப் படுவது மேலைத்தேய தொல்சீர் செம்மொழிகளுக்காக (Western Classical Languages - Greet & Latin) நடத்தப் பெறும் வினாத்தாளில் எதிர்பார்க்கப்படும் மொழியறிவு போன்றதும் அன்று.

பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களே பெரும்பாலும் இப்பாடங்களுக்கான பரீட்சகர்களாக இருக்கும் நிலை இன்று வரை தொடங்குகின்றது. பாடத்திற்கான சிறப்புப் புலமையினர் என்ற வகையில் இவர்கள் இடம் பெறுவது இயல்பே. இப்பரீட்சை பல்கலைக் கழகத்திலே தமிழ் பயில்வதற்கானதாக மாத்திரம் என்று கொள்ளுதல் கூடாது.

இதனை இன்று நிலவும் கல்விப் பின்புலத்திலே நோக்கும்போது தமிழைத் தொடர்பாடற் செம்மையுடன் கையாளுவதற்கான தேர்ச்சிகளையும் அதேவேளையில் தமிழின் இலக்கியப் பாரம்பரியத்தையும் அறிய விரும்புபவர்களுக்கானவொரு தொடக்கநிலைப் பரீட்சையாகவே கொள்ளப்படுகின்றது.

## V

மேலே மேற்கிளம்பியுள்ள பாட வரைவுமட்டம் எவையெவை பற்றிய அறிவு இக்கல்வி மட்டத்தில் எதிர்பார்க்கப்படுகின்றன என்பதை நிர்ணயம் செய்வதாகவுள்ளது. இந்தப் பின்புலத்திற் பார்க்கும் பொழுது பின்வருவனவற்றிற் பயிற்சியும் தேர்ச்சியும் எதிர்பார்க்கப்படுவனவாக இருக்கலாம். தமிழ் மொழியினது இன்றைய பயன்பாட்டு நிலையினை நோக்கும் போது அதாவது தமிழ் அரசகரும மொழியாகவும் அறிவியல் மொழியாகவும் தொழிற்படும் இன்றைய நிலையில் கீழ்க்காணும் எழுத்து முறைகளை முக்கியமானவையெனக் கூறலாம்.

அ. ஒரு விடயம் பற்றிய எடுத்துக்கூறுகை (பெரும்பாலும் இது கட்டுரை வடிவத்தில் எடுத்துக்கூறப்படும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. ஏற்கனவே எடுத்துக்கூறப்பட்ட ஒரு பகுதியை சுருக்கிக்கூறல், விரித்துக்கூறல் இவற்றுக்கு கிரகித்தல் திறன் மிக நுண்ணியதாக இருத்தல் வேண்டும். விடயத்தின் உயர்நிலைக் கருத்தை அறிந்து கொள்ளுதல் அது கூறப்பட்டுள்ள முறைமையினை இனங்கண்டு கொள்ளல் என்பன இதனுள் அடங்கும். ஒரு மொழியினைக் "கையாளும்" திறனென்பது இரண்டு நிலைகளிலே தெரியவரும் முதலாவது அதன் கட்டமைப்பைப் பயன்படுத்தும் திறன் மற்றையது சொற்களஞ்சிய வளம். சொற்களஞ்சியமென்பது வாசிப்புப் பரீட்சயத்தினாலும் கிட்டும் அந்த வாசிப்பு நவீன உலகில் இருநிலைப் படுகின்றது. முதலாவது அம்மொழியிலே கவர்ச்சிமிக்க வெளிப்பாட்டுத் திறன் கொண்டவர்களுடைய ஆக்கங்களை வாசிப்பதால் வருவது. இரண்டாவது பிறமொழிகளில் இத்தகைய வெளிப்பாடுகள் அமையும் முறைமை பற்றித் தெரிந்திருத்தல். இது அம்மொழிகளை நேரடியாக வாசிப்பதாலோ அல்லது அவற்றின் மொழி பெயர்ப்புக்கான வாசிப்பதாலோ வரலாம். ஆனால் இதனிலும் பார்க்க முக்கியத்துவம் பெறுவது. இன்னொன்றும் உண்டு. அது அம்மொழியின் அடிப்படைக் கட்டமைப்புப் பற்றிய அறிவாகும். இதனைப் பொதுவாக இலக்கணம் என்று கூறுவோம். இது பற்றி சற்று விரிவாக நோக்குதல் வேண்டும். முதலாவதாக மேற்கிளம்பும் வினாவானது இலக்கணம் ஏன் அவசியமாகின்றது என்பதாகும்.

இது உண்மையில் மிகமிக முக்கியமானவொரு விடயமாகும். (இது பற்றிய விபரத்துக்கு இக்கட்டுரைத் தொகுதியிலுள்ள பிற கட்டுரைகளையும் பார்க்க வேண்டும்)

இவ்விடத்தில் இதனை மிகமிகச்சுருக்கமாக பின்வருமாறு எடுத்துக் கூறலாம். தமிழில் அர்த்தங்கள் எவ்வாறு தோற்றுவிக்கப் படுகின்றன. (How is meaning created in tamil) ஒரு மொழியின் கட்டமைப்பைத் தெரியாத ஒருவர் அந்த மொழியைப் பேசும் இன்னொருவரிடத்தோ அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிக்கும் இன்னொருவரிடத்தோ தான் கூறவிரும்புவதையோ அல்லது வாசிப்பவர் / கேட்பவர் பதிற்குறியை (Response) ஏற்படுத்துவதற்கோ குறித்த அந்த மொழியில் அர்த்தம் எவ்வாறு தோற்றுவிக்கப் பெறுகிறதென்பதை அறிந்திராமற் செய்ய முடியாது.

உ+ம்: "அவன் நாளை வருவோம்" என்பது தமிழில் அர்த்தமுள்ள தொடராக இருக்க முடியாது. இந்த நிலையில் தமிழ்மொழியின் அடிப்படைக் கட்டமைப்பான

அ. திணை, பால், எண், இடம்

ஆ. கருத்து வேறுபடுத்தும் உத்திகள் (குடையால் அடித்தான், குடைக்கு அடித்தான்)

இ. பெயர்வினைத் தொழிற்பாடு

ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இம்மட்டத்தில் மேற்கூறியவை பற்றிய தரவுகளை மீண்டும் கூறுவதே நோக்கமாக இருத்தல் கூடாது. உண்மையில் இத்தரவுக்கு பின்புறமாகவுள்ள காரணங்களை இயன்றளவு புலப்படுத்தல் வேண்டும்.

உ+ம்: திணையின் முக்கியத்துவம், பாரம்பரிய இலக்கண முறைமையில் ஒருமை நிலையிலேயே ஆண் பால், பெண்பால் வேறுபாடு உணர்த்தப்படும் முறைமை - மகளிர் பாடசாலையில் வரும் மகளிர் பலர்பாலாகும்.

இத்தகைய கட்டமைப்பு அறிமுகத்தில் சொற்புணர்ச்சி பற்றிய அர்த்த நிலைத் தேவைகள் தெளிவு படுத்தப்படல் வேண்டும். (பல் + பசை = பற்பசை; குதி + கால் = குதிக்கால்)

இரண்டாம் மொழி நிலையில் கற்கும் போது மொழியின் எடுத்துக்கூறல் முறைகளை அம்மொழியைப் பயிலும் மாணவர்களுக்கு அறிமுகம் செய்வது அவசியம் ஆனால் முதல்மொழியாகவுள்ள மொழியினைப் பற்றிய பரீட்சையில் அப்பரீட்சார்த்திக்கு அந்த எடுத்துக்கூறல்கள் ஏற்கனவே தெரியுமென்றே கொள்ள வேண்டும். இந்தநிலையில் அந்தப் பயன்பாட்டுக்கான காரணங்களை நன்கு விளக்கல் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கூறுவது வினாக்களின் இயல்பு பற்றியவொரு பிரச்சினையைக் கிளப்புகின்றது. கேட்கப்படும் வினாக்கள் நினைவு மீட்புக்குரியனவாகும். அல்லது மாயோத்திறனிற் பரீட்சயம் இருக்க வேண்டுமா என்பது அச்சாணியான ஒரு விடயமாகும். நினைவு மீட்பு நிலைப்பட்ட வினாக்களைக் கேட்பதால் மனப்பாடம் செய்து எழுதுமொரு நிலைமை வளர்த்துள்ளமையை இங்கு எடுத்துக்கூறுவது அவசியம். சரியான விடையை தெரிந்து சுட்ட வேண்டிய தெரிவுப் பன்மை (Multipile Choice) கொண்ட வினாக்கள் இன்னும் தமிழ்ப் பாடத்தில் அமைக்கப் படவில்லை என்பது ஒரு முக்கிய விடயமாகும்.

க.பொ.த. உயர்மட்டப் பரீட்சையில் தமிழிலக்கியம் பற்றிய அறிவு எத்தன்மையினதாக இருத்தல் வேண்டுமென்பது ஒரு முக்கிய பிரச்சினையாகவுள்ளது. மூன்றாம் நிலைக்கல்வியின் தொடக்கத்தில் வரும் பாட அறிமுகமென்ற வகையில் தமிழிலக்கிய முழுமையும் பற்றியவோர் அறிமுகம் இருத்தலே நியாயபூர்வமானது. கல்வி நிலையிலிருந்து கூறுவதானால் இதனைப் பின்வருமாறு கூறலாம். இப்பரீட்சை மட்டத்தில் மாணவர்கள் தமிழிலக்கிய முழுமை பற்றிய “காட்டிக் காட்டுகை” யொன்று செய்யப்படல் வேண்டும்.

இவ்வாறு கூறுவது இது எத்தகைய பாட அறிவை எதிர்நோக்குகின்றது என்பது அந்த “அறிமுகம்” எத்தகையதாக அமைதல் வேண்டுமென்பதும் தவிர்க்க முடியாத விளாக்களாகும். இதனைச் சற்று விரிவாக நோக்குவோம்.

ஓர் இலக்கியப் பாரம்பரியத்தின் அல்லது முழுமையின் அறிமுகமென்பது அந்த மொழியிற் பிரதானமாக எழுத்து வழக்கில் (இப்படிக் கூறுவதனால் வாய்மொழி மரபுக்கு முக்கியத்துவமில்லையென்று ஆகிவிடாது) உள்ள எழுத்துத் தொடர்ச்சியை அறிமுகம் செய்தலாகும். அந்த அறிமுகத்தின் போக்கினை இரண்டு முக்கிய அம்சங்கள் நிர்ணயிக்கும் ஒன்று இலக்கியப் பாரம்பரியத்தின் முக்கியத்துவம் (தமிழர்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியமென்ற இயல்புக்கு மேலேயுள்ள முக்கியத்துவங்களை இங்கு மனங்கொள்ளல் வேண்டும் - தென்னிந்திய, இந்திய முக்கியத்துவம்) மற்றையது அதன் சுவை நிலை முக்கியத்துவம், சுவைநிலை முக்கியத்துவம் எனும் பொழுது அதன் நயப்புக்கான முக்கிய காரணிகளையும் நயக்கத்தக்க ஆக்கங்களையும் பற்றி அறிந்து கொள்ளலாம்.

இலக்கிய முக்கியத்துவம், இலக்கியச் சுவையறிதலென்பவை அடிப்படையில் பண்பாட்டு நிலைப் பட்டனவாகும். இதற்குள்ளும் இரண்டு நிலைகள் உண்டு. ஒன்று ஒட்டுமொத்தமான தமிழ்ப் பண்பாட்டினுள் இலக்கியம் பெறுமிடத்தை அறிந்து கொள்ளல், மேலோட்டமாகவெனினும் இது கட்டாயமாக அறியப்பட வேண்டியதொன்றாகும். இப்படி அறிய முனையும் பொழுதுதான் வாய்மொழி இலக்கியமும் தமிழர் தம் திறமையைக் காட்டிய பிற கலைகளுக்கும் இலக்கியத்திற்குமுள்ள உறவு எத்தகையதென்பது புலனாகத்தக்க வகையில் இந்த அறிமுகங்கள் அமைதல் வேண்டும். மற்றையது தமிழின் இலக்கியப் பண்பாடு (Literacy Culture of Tamil) பற்றியதாக அமையும். யார் பாடினார்கள், எத்தகையோர் பாடுவதற்குரியவர்களாக கருதப்பட்டார்கள், என்னென்ன விடயங்கள் ஆக்கங்களுக்குரியவையாகக் கருதப்பட்டன. பாடுநர், எழுதுனருக்கான தகைமைகள், சமூக அந்தஸ்து, வெகுமானம் ஆகியவை பற்றிய விபரங்கள் இதனுள் வரும் இலக்கியப் பண்பாட்டினுள் இலக்கிய மொழிக்கு ஒரு முக்கிய இடமுண்டு.

மேலே கூறியன பற்றிய தெளிவுள்ளவர்களே இந்தக் கற்பித்தலுக்குப் பொருத்தமானவர்களாவர்.

தமிழிலக்கியத்தின் முக்கியத்துவத்தினையும், சுவைச் சிறப்பையும் எடுத்துக் காட்டும் வகையில் இலக்கியங்களை அறிமுகம் செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் போன்ற நீண்டகால வரலாற்றுத் தொடர்ச்சியுடைய ஒரு மொழியினது இலக்கியப் பாரம்பரியச் செழுமையுள்ள எல்லா மொழிகளுக்கான இலக்கியங்களையும் எந்த இலக்கியங்களைப் பயிற்றுவது அல்லது பயிலுமாறு வேண்டுவதென்பது சிரமசாத்தியமானவொரு காரியமாகும்.

இந்தவிடத்தில் நம்மையுமறியாமல் நாம் இலக்கியப் பாட விதிப்புக்குள் இறங்கி வருகிறோம்.

இந்நிலை அடுத்த வினாவைக் கிளப்புகிறது - இத்தகையதொரு அறிமுகத்திற்குத் தமிழின் எந்த இலக்கியங்களைப் "பாடமாக" (text) வைப்பதென்பதே வினாவாகும்.

இலக்கிய முக்கியத்துவம் குறைந்தபட்சம் ஓரளவு சமனாகவாவது இருத்தல் வேண்டும்.

இந்தப் பணியினைத் தொடங்கும் பொழுதே ஒரு கல்வி நிலைப் பிரச்சினையுண்டு. அதன் பிரதான எடுகோள் தெரிவித்ததிலிருந்து தெரியாததற்கு செல்வது என்பதாகும். அதாவது குறிப்பாக இலக்கியம் போன்றவொரு சுவை நிலைப் பாடம் ஏற்கனவே அறியப்பட்ட சூழலிலிருந்து தொடங்கியப் படிப்படியாக அதுவரை தெரியப்படாத அனுபவங்களுக்கும் விடயங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்பதே அதன் கருத்தாகும்.

உண்மையில் க.பொ.த உயர்மட்ட வகுப்பு வரும் மாணவர்களின் வயது மட்டத்தினை நோக்கும் போது (16 - 17+) தெரிந்ததிலிருந்து தெரியாததற்கு செல்வதே பொருத்தமானதெனினும் ஏறத்தாழ தரம் 6 இலிருந்து தரம் 11 வரை அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இலக்கியப் பரிட்சயம் அவர்களுக்கு தமிழிலக்கியம் பற்றியவொரு வரலாற்றுப் மனப்பதிவினை ஏற்படுத்தியிருக்கும் சங்க இலக்கியப் பாடல்கள் பற்றிய பரீட்சயமோ, புதுமைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தன் பற்றிய பரீட்சயமோ இல்லையெனினும் நிச்சயமாக திருவள்ளுவர் முதல் பாரதியார் வரையிலானவொரு வரலாற்றோட்டம் தெரிந்திருக்கும். குறிப்பாக இடைக்காலத்து சமய இலக்கியங்கள் பற்றியவொரு வற்புறுத்துகை கூட உண்டு.

எனவே மூன்றாம் கல்விநிலைத் தொடக்கமெனும் வகையில் மேற்கொள்ளும் பாடம் பற்றிய வரன்முறையான அறிமுகம் தொடக்கத்திலிருந்து இன்றைவரையென்ற அடிப்படையிலே அமைவதே பொருத்தமானதாகும்.

அடுத்த வினா பாடத்தேர்வு பற்றியமாகும். இதனையும் இரண்டு நிலைகளிலே செய்யலாம். முதலாவது முக்கியமானவையென கருதப் படத்தக்க இலக்கியப் பாடங்களிலிருந்து (Literary texts) சிறுசிறு சுவையான பகுதிகளை தெரிந்தெடுத்தல் (Selection from literary texts) இவற்றையொரு விதிக்கப்பட்ட இலக்கியத் தொகுதியாக்கலாம். இத்தகையதொரு தொகுதியைப் படிக்குமாறு தூண்டுவது இம்மாணவர்களின் வயது நிலையை நோக்கும் பொழுது சிரமமானவொரு முயற்சியாகவேயமையும். இலக்கிய வரலாற்றோட்டம் பற்றியவோர் ஆரம்பப் புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்வதற்கு இந்நடைமுறை உதவுமெனினும் பாடப்பகுதிகளின் தொகையும் பன்முகப்பாடும் ஒட்டுமொத்தமான சுவை நிலையுணர்வை மாணவர்கள் மனதிலே தோற்றுவிப்பதற்கு இது ஓரளவு உதவ முடியும்.

ஆனால் இதனிலும்பார்க்க இலக்கிய வரலாற்றோட்டத்தினதும், சுவை முகிழ்ப்பினதும் மைல்கற்களாக அமையக்கூடிய இலக்கிய ஆக்கங்களை அல்லது ஆக்கங்களின் முக்கியத்துவமுடைய பகுதிகளைத் தெரிவு செய்து அவற்றைப் பாடங்களாக விதிப்பது பொருத்தமானதொரு நடைமுறையாக அமையலாம். இது முந்தையது போன்று விரிதொகையினதாக இருக்க வேண்டிய அவசியமில்லை. உண்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கியச் செழுமையின் வளர்ச்சியில் பிரதான கட்டங்களாக திருக்குறள், சிலப்பதிகாரம், மாணிக்கவாசகர். நம்மாழ்வார், குமரகுருபரர் ,இஸ்லாமிய வழி ,திருப்புகழ், கிறிஸ்தவ வழிவரும் அம்மானை நிலைப்பாடல்கள், ஆறுமுகநாவலர், பாரதியார், புதுமைப்பித்தன் என மைல்கற்களாக அமையும் பாடப் பகுதிகளிலிருந்தே ஒரு தொகுதியினைத் தொகுத்தெடுத்தல் மிகுந்த பிரயோசனத்தைத் தரும். இத்தகையதொரு தெரிவு தமிழிலக்கியப் பண்பாட்டின் செழுமையையும், சுவையையும் நன்கு வெளிக்கொணர்வது மாத்திரமல்லாது மாணவ நிலையில் சுவைக்கப்படுவதற்கும் உதவும்.

இப்படியானவொரு பாடத்தொகுப்புப் பற்றி சிந்திக்கும் பொழுது இலங்கையிலுள்ளவொரு முக்கிய இலக்கியப் பாடவிதிப்புச் சம்பிரதாயம் பற்றிக் குறிப்பிடல் வேண்டும். க.பொ.த உயர் மட்டத் தமிழிலக்கியப் பகுதியினுள் இன்று முக்கியமாக அமையும் பக்தி சைவ, இஸ்லாமிய, கிறிஸ்தவப் பாடப் பகுதிகளாகும். சைவத்திற்குப் பெரிய புராணமும், இஸ்லாத்திற்குச் சீறாப் புராணமும், கிறிஸ்தவத்திற்குத் தேம்பாவணி அல்லது இரட்சணிய யாத்திரீகம் அமைதல் வழக்கு இஸ்லாத்திற்கும், கிறிஸ்தவத்திற்கும் தரப்பட்டுள்ள பாடப்பகுதிகள் உண்மையில் உயரிலக்கிய வழக்கெனக் கருதப்படும் காப்பிய மரபுசார் மத இலக்கியங்களே உதாரணமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகியவை தமிழின் உயரிலக்கியப் பாரம்பரியத்தில் பெறும் இடத்தினை வற்புறுத்தும் பேரிலக்கியங்கள் பலவற்றிலும் பார்க்க உண்மையில் தமிழிலக்கியச் செழுமையினை முற்றுமுழுதாக வெளிக்கொணரும், அதாவது இஸ்லாமிய, கிறிஸ்தவத் தமிழிலக்கியங்கள் முன்னிலைப்படுத்தப்படாது போயுள்ளன என்றே கூறவேண்டும். இஸ்லாத்தையும், கிறிஸ்தவத்தையும் பொறுத்தவரையில் அவை தமிழ் நிலையில் பரவிய போது அடிநிலை மக்களின் ஈமான் அல்லது சுவிசேஷமாக மாறுவதற்குக் காரணமாகவும் எடுத்துக் காட்டாகவும் அமைத்தலை மக்கள் நிலைத் துதிப்பாடல்கள், வழிபாட்டிலக்கியங்களாகும். இவை கவனிக்கப்படாது தொடர்ந்து புறக்கணிக்கப்படுவது கவலைக்குரிய ஒரு விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சமய இலக்கியப் பாடத்தெரிவில் ரசனையுணர்வு சார்ந்த முக்கிய விடயமொன்று மறக்கப்பட்டுப் போயுள்ளது. இஸ்லாமோ, கிறிஸ்தவமோ தமிழின் இலக்கியச் செழுமையோடு பின்னிப் பிணைந்து கிடப்பவையாகும். இவை முழுத் தமிழிலக்கியத்தின் வளத்திற்கும் எவ்வாறு உதவியுள்ளன என்பதனைக் காட்டுவதற்கு உதாரணமாக அமைதல் வேண்டும். ஆனால் பாடப்பகுதியாகத் தரப்படும் பெரும்பாலான பகுதிகளில் இலக்கியச் சுவை முனைப்புறத் தெரிவதில்லை. பல்வேறு மதங்கள் தமிழுக்குள் தொழிற்படுவதால் தமிழ்ப் பண்பாட்டினுள் கிளம்பும் நெகிழ்ச்சியுணர்வும் அதனிலும் மேலான பொறுமையும் மிக முக்கியமானதாகின்றது.

## VII

க.பொ.த உயர் மட்டத் தமிழ்ப் பாடத்திட்டத்தில் தமிழிலக்கிய வரலாற்றுக்கு எத்தகைய இடம் கொடுக்கப்பட வேண்டுமென்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

இப்பொழுதுள்ள நிலையில் 2, 3 வினாக்கள் இலக்கிய வரலாறு சார்ந்தவையாக உள்ளன. இவை தமிழுக்கான இரண்டாம் வினாத்தாளில் இலக்கணப் பகுதியின் பின்னர் வருகின்றன. ஈழத்திலக்கிய வரலாறும் இலக்கிய வரலாற்றுப் பகுதியினுள் ஒரு முக்கிய இடத்தினைப் பெறுகின்றது.

இவ்விடத்து நாம் நோக்க வேண்டுவது தமிழெனும் பாடம் பற்றிய (இதுவரை நாம் பார்த்த) கட்டுக்கோப்பினுள் தமிழிலக்கிய வரலாறு பற்றிய அறிகை எவ்வாறு கொண்டுவரப்பட வேண்டுமென்பதாகும். பல்கலைக்கழக மட்டத்தில் இலக்கிய வரலாற்றுக்கு ஒரு முக்கியமான இடம் உண்டு. பல்கலைக்கழக நிலையிலும் கூட இலக்கிய வரலாறு பயிலப்படுவதற்கான தேவை யாதென்பது பற்றிய கருத்துத் தெளிவு அவசியமாகும். நாட்டின் வரலாற்றுப் பின்புலத்தில் இலக்கியங்களின் வளர்ச்சியையும், ஒரு கலை வடிவமென்ற வகையில் இலக்கியமானது எத்தகைய படைப்பாக்கச் சவால்களினூடாக (Challenges in Creativity) மேற்கிளம்புகின்ற தென்பதையும் இலக்கிய வரலாற்றுக் கற்கையின் பிரதான தேடல்களாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளல் வேண்டும். இலக்கிய மாணவரொருவர் இந்தத் தேடலை மேற்கொள்வதற்கான பிரதான காரணம் உண்மையில் இலக்கியங்களை சிந்தனைக் கருவூலங்கள் என்ற மட்டத்திலும் கலைப் படைப்புகளென்ற மட்டத்திலும் சரியான முறையில் மதிப்பீடு செய்வதற்கேயாகும். இலக்கிய வரலாறு இலக்கிய மதிப்பீட்டிற்கான உறுதுணையாகும்.

இந்த உண்மை இலக்கிய வரலாறு கற்பிக்கப்படும் பொழுது மறக்கப்படக் கூடியதொன்றாகும். உண்மையில் இலக்கியப் பாடவறிமுகம் செய்யப்படுவதென்பது வரலாற்றுப் பின்புலப் பரிச்சயம் ஏற்படுத்தப் படாது செய்யப்படக்கூடியதோர் முயற்சியன்று. மேலே கூறிய முறையில் பாடப்பகுதிகளைக் கட்டமைப்புச் செய்கின்ற பொழுது இலக்கிய வரலாற்றுப் பின்புலம் தயிர் கடைய வெண்ணெய் மேற்கிளம்புவது போல மேலெழும்பும் ஒரு விடயமாகும். இலக்கியப் பாட விதிப்புப் பற்றிய குறிப்பில் பாடத் தெரிவின் சுவை நய அம்சம் பற்றிக் குறிப்பிட்டோம். தமிழிலக்கியம் பற்றிய முதல் தனி அறிமுகம் என்னும் வகையில் பாடல், உரைப்பகுதிகளின் இலக்கியச் சுவையை முனைப்புறுத்துவது இப்பாடத் தெரிவுக்கான அச்சாணி அம்சமாக இருத்தல் வேண்டும். தமிழ் பற்றி இங்கு வழங்கப்படும் அறிமுகம் அம்மாணவர்களை தமிழின்பால் மேலும் ஈர்த்தல் வேண்டும்.

இக்கண்ணோட்டத்திற் பார்க்கும் பொழுது க.பொ.த உயர் மட்டத் தமிழ்ப்பாட விதமானது தமிழிலக்கிய, இலக்கண அறிவு வேட்கைக்கானவோர் ஆற்றுப்படுத்துகையாக அமைதல் வேண்டும்.

இறுதியாக ஒரு குறிப்பு : இது வினாத்தாளின் இலக்குப் பற்றியது. ஒரு வினாத்தாளின் பிரதான இலக்கு அப்பாடத்திட்டத்தைக் கற்றலுக்கான நோக்கங்கள் ஈட்டப்பெற்றுள்ளனவா என்பதை அறிந்து கொள்வதேயாகும். அந்த அளவில் வினாத்தாளென்பது ஒரு பரீட்சிப்புக் கருவியேயாகும்.

*நன்றி : கூர்மதி 2005*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் மேதாவிலாசம்

*கலாநிதி. எம். ஏ. நு ஃ மான் தலைவர் தமிழ்த்துறை*

பாரதி நூற்றாண்டு விழாக்கள் நாடெங்கும் நடைபெறுகின்றன. பட்டிமன்றங்கள் முதல் பல்கலைக்கழக ஆராய்ச்சிகள் வரை பல்வேறு மட்டங்களில், பல்வேறு வடிவங்களில் இவ்விழாக்கள் நடைபெறுகின்றன. இவ்விழாக்களிலெல்லாம் பாரதி ஒரு மகாகவி, மேதாவிலாசம் நிறைந்தவன் என்ற கருத்துக்கள் திரும்பத் திரும்பக் கூறப்படுகின்றன. இன்று பாரதி ஒரு மகாகவி என்பதிலோ, இந்த நூற்றாண்டில் தமிழில் தோன்றிய ஒரே ஒரு மகாகவி என்பதிலோ, அவன் ஒரு மாபெரும் மேதாவி என்பதிலோ கருத்து வேறுபாடுகள் இல்லை. ஆனால் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு பாரதி ஒரு மகாகவியே அல்ல என்று கல்கி போன்ற பிரபல எழுத்தாளர்கள் வாதப் பிரதிவாதங்கள் நடத்தியதுண்டு. இன்று அது பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போயிற்று. பாரதி ஒரு மகாகவி, மேதாவி என்பது உறுதியாயிற்று.

இச்சிறு கட்டுரையிலே பாரதியை ஒரு மகாகவி என்ற நிலையில் அன்றி ஒரு மேதாவி (Genius) என்ற நிலையிலேயே நான் அணுக முயல்கிக்கின்றேன். அவனது மேதாவிலாசத்தின் அடிப்படைகள் என்று நான் கருதும் சில அம்சங்களை இங்கு சுருக்கமாக விளக்க முயல்கின்றேன். தன் கால ஓட்டத்தின் உயிர் நாடிகளைக் கிரகித்துக் கொண்டு அதற்கேற்ப புதிய சிந்தனைகளை வெளிப்படுத்துபவனே மேதாவியாவான். அவ்வகையில் பாரதியின் மேதாவிலாசத்தின் அடிப்படைகளாக பின்வரும் அம்சங்களை நான் கருதுகின்றேன்.

1. சமூகம் பண்பாடு ஆகியவற்றின் இயக்கவியல் தன்மையை பாரதி நன்கு புரிந்து கொண்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இப்புரிந்து கொள்ளலின் அடிப்படையில் பழமைக்கும் புதுமைக்குமான முரண்பாட்டில் புதுமையின் வழிநின்று புதிய சமூகம், புதிய பண்பாடு ஆகியவற்றை உருவாக்குவதற்கான முற்போக்கான நவீன சிந்தனைப் போக்கு எது என்பதை அவன் இனங்கண்டு கொண்டமை.

3. வெகுஜனங்களில் நம்பிக்கை கொண்டு ,பரந்துபட்ட வெகுஜன எழுச்சிக்காகத் தன்னை இதய சுத்தியாக அர்ப்பணித்துக் கொண்டமை.

இவை பற்றி நான் இங்கு சுருக்கமாக விளக்க முயல்கின்றேன்.

1. பௌதீக உலகைப் போல் சமூகம், பண்பாடு ஆகியவையும் இடையறாது இயங்குகின்றன. மாறுகின்றன. வளர்கின்றன. இத்தகைய இயக்கம், மாற்றம், வளர்ச்சி ஆகியவற்றையே நான் இயக்கவியல் தன்மை என்று குறிப்பிடுகின்றேன். சமூகம், பண்பாடு ஆகியவற்றின் இவ்வியக்கவியல் தன்மையை பாரதி நன்கு புரிந்து கொண்டிருந்தான் என்பதை அவனது எழுத்துக்கள் நமக்குப் புலப்படுத்துகின்றன. இவ்வாறு கூறுவதன் மூலம் தத்துவார்த்த நோக்கில் பாரதி ஓர் இயக்கவியல் பொருள் முதல் வாதியாக இருந்தான் என்று நான் கருதுவதாகப் பொருள்படாது. இயக்கவியல் தன்மையைப் புரிந்து கொள்பவன் பொருள் முதல் வாதியாகவும் இருக்க வேண்டும் என்பது அத்தியாவசிய நிபந்தனை அல்ல. ஆனால் சமூகம், பண்பாடு ஆகியவற்றில் ஏற்படும் மாற்றம் தவிர்க்க முடியாது, அவசியமானது என்பதை பாரதி புரிந்து கொண்டிருந்தான் என்பதே நமக்கு முக்கியமாகது. இந்தப் புரிந்து கொள்ளலே தன் காலத்து அடிப்படைப் பிரச்சினைகளை உணர்ந்து அதற்கேற்ற புதிய சிந்தனைகளை இனங்கண்டு கொள்ள அவனுக்கு உதவியது.

> "காலத்துக் கேற்ற வகைகள் - அவ்வக்
> காலத்துக் கேற்ற ஒழுக்கமும் நூலும்
> ஞாலம் முழுமைக்கும் ஒன்றாய் - எந்த
> நாளும் நிலைத்திடும் நூல் ஒன்றும் இல்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாரதியின் கவிதை வரிகள் இதை நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. இதை நாம் "காலப் பிரக்ஞை" என்றுகூடக் கூறலாம். இப்பிரக்ஞை பாரதியின் எல்லா எழுத்துக்களிலும் மொழி, இலக்கியம், கலை கல்வி உட்பட எல்லா சமூக பண்பாட்டுப் பிரச்சினைகளிலும் பிரதிபலிக்கக் காணலாம். உதாரணமாக, மொழி மாற்றம் பற்றி பாரதி பின்வருமாறு குறிப்பிடுகின்றான். நெடுங்காலத்துக்கு முன்னே எழுதப்பட்ட நூல்கள் அக்காலத்துப் பாஷையைத் தழுவியவை. காலம் மாற மாற பாஷை மாறிக்கொண்டு போகிறது. பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர்கள் அந்த அந்தக் காலத்துச் சனங்களுக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய பதங்களையே வழங்க வேண்டும்.

பாரதியின் மேற்காட்டிய கூற்றிலே இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று காலம் மாற மாற மொழி மாறுகின்றது என்பது. மற்றையது புதிய மாற்றத்திற்கேற்ப புதிய மொழி வழக்கைக் கையாள வேண்டும் என்பது. இந்த இரண்டாவது அம்சம் முதலாவது அம்சத்தின் விளைவாகும். அதாவது மொழியில் ஏற்படும் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை, அவசியமானவை என்பதைப் புரிந்து கொண்டால்தான் புதுமைகளைப் புகுத்துவது பற்றிச் சிந்திக்க முடியும். பாரதியிடம் நாம் இந்த இரு பண்புகளையும் காண்கிறோம்.

2. சமூகம், பண்பாடு ஆகியவற்றில் ஏற்படும் மாற்றம் தவிர்க்க முடியாததும் அவசியமானதும் என்ற புரிந்து கொள்ளலே தன் காலத்து அடிப்படைப் பிரச்சினைகளை உணர்ந்து அதற்கேற்ற புதிய சிந்தனைகளை வெளிக்காட்டப் பாரதிக்கு உதவியது. காலப்போக்கில் சமூக பண்பாட்டம்சங்களில் மாற்றங்கள் ஏற்படும் போது, பழமைக்கும் புதுமைக்கும் இடையே முரண்பாடு தோன்றுகின்றது. இந்திய சமூகத்தில் ஆங்கிலேயர் முதலாளித்துவ முறையைப் புகுத்தியபோது முதன்முறையாக இந்தியாவிலே நவீனத்துவம் சம்பந்தப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகள் தோன்றின. பழைய மரபுகளுக்கும் புதிய நிலைமைகளுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டன. இந்த முரண்பாட்டிலே பாரதி புதுமையின் வழி நின்றான். புதிய சமூகம், புதிய பண்பாடு ஆகியவற்றிற்கான திட்டவட்டமான நவீன சிந்தனைப் போக்கை பாரதி கடைப்பிடித்தான். இது அவனது மேதாவிலாசத்தின் இரண்டாவது அம்சம் என நான் கருதுகின்றேன். நவீன வாழ்க்கையின் முக்கியமான பிரச்சினைகளிலெல்லாம் பாரதியின் முற்போக்கான நவீன சிந்தனைப் போக்கை நாம் இன்றும் இனங்காண முடிகின்றது. என்னைப் பொறுத்தவரை தமிழர் வரலாற்றிலே முதலாவது தீவிரமான நவீன சிந்தனையாளன் பாரதியே என்று தோன்றுகின்றது. பாரதி காலத்தில் வாழ்ந்த பல அகில இந்தியத் தலைவர்களிலும் பார்க்க பாரதியின் முற்போக்கான சிந்தனையில் அதிக தீவிரத் தன்மையைக் காணமுடிகின்றது.

பொதுவாக, மொழி, பெண்கள், சாதி முதலியவை பற்றிய சிந்தனைப் போக்கிலே பழமைவாதத்தின் செல்வாக்கு அதிகம் காணப்படும். இவை பற்றிய பாரதியின் கருத்துக்கள் அவனது தீவிரமான நவீன சிந்தனைக்குப் போக்குக்கு நல்ல எடுத்துக்காட்டுக்களாக உள்ளன. மொழி பற்றிய பாரதியின் கருத்து ஒன்றை ஏற்கனவே பார்த்தோம். "கூடியவரை பேசுவது போலவே எழுதுவதுதான் சிறந்தது என்பது என்னுடைய கட்சி" என்று கூறி பேச்சுக்கும் எழுத்துக்கும் இடையேயுள்ள இடைவெளியை சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்பே குறைக்க முனைந்தவன் பாரதி. பாரதியின் வசனமும் செய்யுளும் அவனது தீவிரமான மொழிச் சிந்தனையின் வெளிப்பாடுகளாகக் காட்சியளிக்கின்றன.

பெண் விடுதலை பற்றிய பாரதியின் சிந்தனைகள் இன்னும் கூடத் தீவிரத்தன்மை உடையவனாகவே காணப்படுகின்றன. தங்கள் கணவர்களால் அடிமைகள் போலவே நடத்தப்படுகின்ற தமிழ்ப் பெண்கள் தங்கள் கணவர்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறவேண்டும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி எழுதினான் : "நான் எல்லா வகையிலும் உனக்குச் சமமாக வாழ்வதில் உனக்குச் சம்மதம் உண்டானால் உன்னுடன் வாழ்வேன். இல்லாவிட்டால் இன்று ராத்திரி சமையல் செய்யமாட்டேன். எனக்கு வேண்டியதை பண்ணித் தின்றுகொண்டிருப்பேன். உனக்குச் சோறு போடமாட்டேன். நீ அடித்து வெளியே தள்ளினால் ரஸ்தாவில் கிடந்து சாவேன். இந்த வீடு என்னுடையது. இதைவிட்டு வெளியேறவும் மாட்டேன்" என்று கண்டிப்பாகச் செல்லிவிட வேண்டும். இங்ஙனம் கூறும் தீர்மான வார்த்தையை இந்திரிய இன்பங்களை விரும்பியேனும், நகை, துணி முதலிய வீண்டம்பங்களை இச்சித்தேனும், நிலையற்ற உயிர் வாழ்வைப் பெரிதாகப் பாராட்டியேனும் மாற்றக்கூடாது. சிறிது சிறிதாக, படிப்படியாக ஞாயத்தை ஏற்படுத்திக் கொள்வோம் என்னும் கோழை நிதானக் கட்சியாளின் மூடத்தனத்தை நாம் கைக்கொள்ளக்கூடாது. நமக்கு ஞாயம் வேண்டும். அதுவும் இந்த க்ஷணத்திலேயே வேண்டும். ஆதலால் சகோதரிகளே, பெண் விடுதலைக்காக இந்த க்ஷணத்திலே தர்மயுத்தம் தொடங்குங்கள். நாம் வெற்றி பெறுவோம். நமக்கு மஹாசக்தி துணைசெய்வாள்" கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்ற மரபுவழிப்பட்ட சமூகத்திலே கணவன்மார்களுக் கெதிராகத் தர்மயுத்தம் செய்யத் தூண்டும். பாரதியின் இக்கருத்துக்கள் எவ்வளவு தீவிரம் மிக்கவை என்று கூறவேண்டியதில்லை.

இந்தியாவில் விதவைகள் தொகையைக் குறைக்க வேண்டுமென்றால் ஆண்கள் மறுவிவாகம் செய்து கொள்வதில்லை என்று விரதம் பூண வேண்டுமென மகாத்மாகாந்தி ஒருமுறை கூறினார். ஸ்ரீமன் காந்தி சொல்லும் இந்த உபாயத்தை பாரதி நன்கு விமர்சித்து நிராகரிக்கின்றான். "எவ்வகையாலே நோக்குமிடத்தும் ஸ்ரீமான் காந்தி சொல்லும் உபாயம் நியாயவிரோதமானது, சாத்தியப்படாதது, பயனற்றது" என்பது பாரதியின் தீர்ப்பாகும். இப்பிரச்சினைக்குப் பாரதியின் காரிய சாத்தியமான தீர்வு பின்வருமாறு அமைந்தது. "இந்தியாவில் சிற்சில ஜாதியோரைத் தவிர மற்றப்படியுள்ளோர், நாகரீக தேசத்தார் எல்லோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கிறபடி விதவைகள் எந்தப் பிராயத்திலும் தமது பிராயத்துக்குத் தகுந்த புருஷரைப் புனர்விவாகம் செய்துகொள்ளலாம். அப்படியே புருஷர்கள் எந்தப் பிராயத்திலும் தம் வயதுக்குத் தக்க மாதரை மறுமணம் செய்து கொள்ளலாம். இந்த ஏற்பாட்டை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர வேண்டும். "சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன் பாரதி கூறிய இந்தக் கருத்துக்கள் இன்றும் தீவிரத்தன்மை உடையவனவாகவே உள்ளன.

சாதிப்பிரச்சினை பற்றிய பாரதியின் சிந்தனைகள் பிரசித்தமானவை. சாதியமைப்புக்கு எதிரான பாரதியின் பாடல்கள் எல்லோருக்கும் அறிமுகமானவை. சாதி பற்றிக் கூறும் சாஸ்திரங்கள் உண்மையில் சாஸ்திரங்கள் அல்ல, சதி என்று கூறியவன் பாரதி. இந்தியாவில் சாதிப் பிச்சினையைத் தீர்ப்பதற்கு எல்லா வகுப்பினரையும் பிராமணர்களாக்கி விடவேுண்டும் என்று சுவாமி விவேகானந்தர் கூறியிருந்தார். பாரதி இதுபற்றி பின்வருமாறு கூறினான். எந்த ஜாதியாக இருந்தாலும் சரி, அவன் மாம்ஸ பட்சணத்தை நிறுத்தும்படி செய்து, அவனுக்கு ஒரு பூணூல் போட்டு, காயத்திரி மந்திரம் கற்பித்துக் கொடுத்துவிட வேண்டும். இதுதான் விவேுகானந்தர் சொல்லிய உபாயம். கூடியவரை நல்ல உபாயமும் கூட. ஆனால் மேல் வகுப்பினர் தம்முடைய உயர்வை மறந்து கீழ் வகுப்பினருடன் கலத்தல் இதனினும் சிறந்த உபாயமாகும்" பாரதியின் இக்கருத்து சாதிப் பிரச்சினை பற்றிய அவனது தீவிரத் தன்மையை நன்கு புலப்படுத்துகின்றது. இதில் உள்ள எள்ளல் கவனிக்கத்தக்கது. மகாத்மா காந்தி, விவேகானந்தர் போன்ற பெருந்தலைவர்களுடன் மாறுபட்ட தீவிரக் கருத்துக்களைப் பாரதி கொண்டிருந்தான் என்பதும் இங்கு முக்கியமானது. இது அவனது தனித்துவத்தையும் மேதாவிலாசத்தையும் காட்டுகின்றது.

3. பாரதியின் புதிய சமூகம், பண்பாடு பற்றிய நவீன சிந்தனைகள் அனைத்தும் பரந்துபட்ட பொதுமக்களை மையமாகக் கொண்டவை. இது அவனது மேதாவிலாசத்தின் மூன்றாவது அடிப்படையாகும். கலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம், கல்வி, அரசியல், அனைத்துமே பொதுமக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென பாரதி கருதினான். பொது ஜனங்கள் என்ற சொல்லை பாரதியின் எழுத்துக்களில் நாம் அடிக்கடி காணலாம். "இப்போது உலகம் முழுவதுமே ராஜாக்களையும் பிரபுக்களையும் நம்பி வித்தை பழகும் காலம் போய்விட்டது. பொதுஜனங்களை நம்பவேண்டும். இனிமேல் கலைகளுக்கெல்லாம் யோசனையும் ஆதரவும் பொது ஜனங்களிடமிருந்து கிடைக்கும். அவர்களுக்கு உண்மையான அபிருஷி உண்டாக்கிக் கொடுப்பது வித்துவான்களுடைய கடமை" என்று பாரதி எழுதினான். பொதுசனங்களில் நம்பிக்கை வைத்து, பொதுசன நலனுக்காக, பொதுசன இயக்கத்தில் தீவிரமாக, விசுவாசமாக ஈடுபட்டவன் பாரதி, பொதுமக்கள் பூரண விடுதலை என்பது அரசியல், பொருளாதார, சமூக ரீதியான சகல தளைகளில் இருந்தும் விடுபடுவதைக் குறிக்கும்.

"இப்போது பூமண்டலமெங்கும் விடுதலைப் பெருங்காற்று வீசுகின்றது. கொடுங்கோல் அரசர்களுக்குள்ளே கொடியவனாய், ஹிரண்யனைப் போல் ஐரோப்பாவின் கிழக்கே பெரும் பகுதியையும் ஆசியாவின் வடக்கே பெரும் பகுதியையும் ஆண்ட ஜார் சக்கரவர்த்தி இப்போது சைபீரியாவில் சிறைப்பட்டுக் கிடக்கிறான்" என்று எழுதினான் பாரதி.

அந்த விடுதலைப் பெருங்காற்றை தமிழ் இலக்கியத்திலே, தமிழ் சிந்தனையிலே முதல் முதல் தீவரமாக வீசச் செய்தவன் பாரதி. இவையெல்லாம் அவனது மேதாவிலாசத்தின் வெளிப்பாடுகள் ஆகும்.

***நன்றி : கூர்மதி 2003***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேர் பொன் இராமநாதனின் கல்விப் பணிகள்

சென்ற நூற்றாண்டின் பிற்கூற்றிலே இலங்கை மக்களின் கல்வித் தேவைகள் மிகுதியும் உணரப்பட்டன. கீழ்த் திசையின் ஆன்ம ஞானமும், மேற்றிசையின் இலௌகிக ஞானமும் ஒன்றிணைந்த சிறந்ததொரு கல்வியின் மூலம் மக்களின் சிந்தனையையும், வாழ்க்கைத் தரத்தினையும் உயர்த்திவிடக் கொலோனல் ஒல்கொட், அநாகரிக தர்மபால, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முதலான பெரியோர்கள் அரிதின் முயன்றனர். இவர்களின் வரிசையில் சேர்.பொன். இராமநாதனையும், அவர் தம்பியாராகிய சேர்.பொன் அருணாச்சலத்தையும் நாம் வைத்து என்றும் நன்றியுடன் நினைவுகூரல் வேண்டும். முன்னவர் உயர்தரக் கல்வி வாய்ப்புக்களை அளிப்பதில் முன்னின்று உழைத்தார். பின்னவர் இலங்கைக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் என்று அறிவுறுத்தி, அக்குறிக்கோள் நிறைவேற்றுவதற்கு முயன்றார்.

இராமநாதன் வாய்ச்சொல் வீரர் அல்லர். அவர் செயல் வீரர். அவரின் செயல்வீரத்திற்கு எடுத்துக் காட்டுக்களே இராமநாதன் மகளிர் கல்லூரியும், பரமேஸ்வரக் கல்லூரியுமாகும். ஒரு காலத்தில் எமது கல்வித் திட்டத்திற் சமயங்கள் புறக்கணிக்கப்பட்டன.

பரமேஸ்வரக் கல்லூரி 1974.10.05 தொடக்கம் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாண வளாகமாக இயங்கத் தொடங்கியுள்ளது. இலங்கையின் வடபகுதியிலே, பல்கலைக் கழகம் ஒன்று அமைதல் வேண்டும் என்ற சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் கனவு இவ்வாறு நிறைவேறியுள்ளதெனலாம். பல்கலைக்கழகம் சம்பந்தமாக அன்னாரின் கூற்றுப் பின்வருமாறு:

"கல்வி என்பது ஓர் இறுக்கமான அச்சிலே வார்த்தெடுக்கப்பட வேண்டிய பொருளன்று, கல்வியின் பொருளும் கல்வி முறையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக்குக் காலம் சந்ததிக்குச் சந்ததி வேறுபட்டு வந்துள்ளது. ஒரு காலத்தில் நிலவிய கருத்துக்களும், வழக்கங்களும் அடிக்கடி நிலவிய கருத்துக்களும், வழக்கங்களுக்கும் இடமளித்துள்ளன. காலப்போக்கிலே இலங்கையில் வடபாகத்திலும் மேற்குப் பாதத்திலும் அங்கு வாழும் மக்களுடைய தன்மைகளுக்காக ஒவ்வொரு பல்கலைக் கழகம் தேவைப்படும் அந்நிய கல்விமான்கள் வற்புறுத்திய விஷயங்களையும், கல்வி முறைகளையும் அடிப்படையாகக் கொள்ளாது வேறு விஷயங்களையும் கல்வி முறைகளையும் அடிப்படையாகக் கொண்ட பல்கலைக் கழகங்களாக இவை தேவைப்படும். இப்பல்கலைக் கழகங்கள் எவ்வெவ்விடங்களில் அமைக்கப்படுகின்றனவோ அவ்வவ்விடங்களிலுள்ள நகரங்களின் அல்லது மாவட்டங்களின் பெயர்களைக் கொண்டவையாய் இருக்க வேண்டும்.

– சேர் பொன்னம்பலம் இராமநாதன், 1927

(யாழ்ப்பாண வளாகத் திறப்பு விழாவையொட்டி வெளியான மலரிலிருந்து அநுவதிக்கப்பட்டது)

சமயச் சார்பற்ற கல்வியை அளிப்பதில் அக்கால அரசு தீவிரம் காட்டியது. ஆனால் இன்று அந்த நிலை இல்லை. ஒவ்வொரு பிள்ளையும் தனது சமயத்தைக் கட்டாயம் கற்றல் வேண்டும் என்ற திட்டம் இன்று நடைமுறையில் இருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் சமயம் என்பது ஏட்டளவிலே கற்று பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடையவதற்குரிய ஒரு பாடம் அன்று. அது நடைமுறையிற் கைக்கொள்ளப்பட வேண்டியது என்பதை இராமநாதன் உணர்ந்ததால் தாம் கட்டிய கல்லூரிகளின் ஒருபால் ஆலயங்களையும் அமைத்தார். யாழ்ப்பாணத்தில் முதல் முதல் நாவலர் அவர்கள் கட்டியெழுப்பிய வித்தியாசாலையிலும் பின்னர் இராமநாதன் கட்டிய கல்லூரிகளிலுமே கோயில்களும் அருகிலே கட்டப்பட்டன என்பது குறிப்பிடத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

என்ற திருவள்ளுவரின் பொன்மொழியை இவர்கள் பொன்னேபோற் போற்றினர் என்பது இதனால் நன்கு புலனாகின்றது. அன்றியும், பிற சமய ஆதிக்கம் நமது சமகால இளஞ்சந்ததிகளைப் பாதிக்காதிருக்க இவர்கள் அரண் அமைத்தனர் என்று கூறுவதும் பொருந்தும்; தமிழ்ப் பெருவேந்தர்களின் ஆலயத் திருப்பணியைப் பின்பற்றிப் பொன்னம்பலவாணேசர் ஆலயத்தைக் கட்டிய இராமநாதன் தமது வித்தியாலயங்களிலும் ஆலயங்களை எழுப்பிக் கல்வியின் முதன்மையிலக்கினை நிறைவேற்றினார் என்பது இவ்விடத்தில் நன்றியோடு நினைவுகூர வேண்டிய ஒன்றாகும்.

"பரமேஸ்வரக் கல்லூரி மாணவரின் இலட்சியங்கள்" என்ற சிறுநூலிலே இராமநாதன் குறிப்பிடுவனவற்றை நோக்கினால் அவர் கொண்டிருந்த கல்வியிலக்கு நன்கு புலனாகும். "பரமேஸ்வரக் கல்லூரி, இந்திய ஞானிகளின் ஞானத்தோடு, தமிழ், சங்கீத இலக்கியச் செல்வங்களும் இணைந்து பிரித்தானியரின் மிகச்சிறந்த கல்விப் பாங்கினைத் தமிழ்ச் சிறுவர் பெறக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தவெனத் தாபிக்கப்பட்டது, இக் கல்வியால் தீயவன் நல்லவனாய் மாறும் நன்மை ஏற்படும். குறும்புகளாலும், வல்லுணர்ச்சிகளாலும் உந்தப்படுபவன் அவற்றினை அடக்கி நற்பணிகளுக்கு உதவுவோனாவான். மந்தைப் போலச் சோம்பி, வேலையற்று உழல்பவன் அத்தகைய தீமையிலே, தோயாதவரை ஊக்கமுடையோனாயும் பிறர் நலம் கருதுவோனாயும் மாறுவான். முரடனாயும், ஆபாசச் செயல்களில் ஈடுபடுவோனாயும் இருப்பவன் சீர்திருத்தப்படுவான், குறுகிய மனப்பான்மையும், வெறுப்புணர்வும் உடையோன் அனுதாபமும், சகிப்பு மனப்பான்மையும் எய்தப் பெறுவான், ஒரு பிரச்சினையையோ அதன் வளர்ச்சியையோ அறிந்து தீர்க்க இயலாதவன் அவற்றை உடனடியாக இனங்கண்டுகொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் காரணங்களை ஆராய்ந்து பரிகாரத்தோடும் வழிவகைகளை அறிந்து நலம் வளர்க்கும் பணிகளிலே ஈடுபடுவான். சிந்தனையிலும் கருத்து வெளிப்பாட்டிலும் தெளிவில்லாதவன் நன்கு சிந்திக்கவும், கருத்தைத் திறம்பட வெளிப்படுத்தவும் ஆற்றல் பெறுவான். சிந்தனையின்றி அந்நியரின் நடை, உடை பாவனைகளைக் கேலி செய்யத்தக்க வகையிலே பின்பற்றுவோன். பரம்பரை பரம்பரையாய் நிலைபெற்றுவரும் தன் மூதாதையரின் இலட்சியங்களை அவை எவ்வளவுதூரம் எமது தேவைகளுக்கும் சூழ்நிலைகளுக்கும் பொருத்தமாய் உள்ளன என்ற அறிவுடன் தான் பிறந்த நாட்டிற்குப் பொருந்தும் நடை, உடை பாவனைகளை மேற்கொள்வான் திருப்தியில்லா மனநிலையில் அலைந்து திரிவோன், தனது நிலையை உணர்ந்து தன்னையும் தான் பிறந்த சமுதாயத்தையும் மேலோங்கச் செய்ய முயல்வான், வெற்றுச் சிந்தனைகளாலும், கானல்நீர் அவாக்களாலும் தடுமாறுபவன் தன் கவனத்தையும், முயற்சியையும் ஒரு முகப்படுத்தி வாழ்வின் பிரதான கடமையாகிய இன்று பந்தியிலும், தனக்கு விதிக்கப்பட்ட கடமைகளிலும் ஈடுபடுத்துவான். இத்தகைய செயனுந்துதலால் அமையும் தனது இலட்சியங்கள் மக்களின் உலகியலானவையும், ஆன்மீகமானவையுமான மகிழ்ச்சியை நிலைபெறுத்தும் என்ற உணர்வோடு அவன் செயற்படுவான்"

கல்வியின் மூலம் உள்ளச் சமநிலைபெற்ற உயர்மகனை உருவாக்கலாம் என்று நம்பிச் செயலாற்றிய இராமநாதன், பெண்களும் தாம் கற்கும் கல்வியின் மூலம் பண்பும் பயனும் வாய்ந்த இல்லத்தரசிகளாக விளங்க வேண்டும் என்ற அவாவினையும் கொண்டிருந்தார். அந்த அவாவினால் உந்தப்பட்ட நிலையிலேயே அவர் பரமேஸ்வரக் கல்லூரியை அமைப்பதற்கு முன்னரே இராமநாதன் மகளிர் கல்லூரியை அமைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் கூறுகிறார்; "இந்தப் பிள்ளைகளுக்கு இலௌகிகமும் ஆன்மீகமும் இணைந்ததான கல்வியினை அளிப்பதற்குகந்த கல்லூரி ஒன்றினை அமைக்கும் எண்ணம் என் உள்ளத்தில் நெடுங்காலமாய் இருந்து வந்தத. ஒரு சந்தர்ப்பத்தில் இக்கல்லூரியினைக் கொழும்பிலே அமைப்பதனால் அங்கு திரள் திரளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து வந்து குவியும் இச்சுச் சிறுவர்களை அவர்களின் சமயத்திற்கு முரணான போக்குகளிலும், சிற்றின்பப் போக்குகளிலும் தேசிய முரண்பாட்டுச் செயல்களிலுமிருந்து மறப்பினை ஏற்படுத்தலாம் என்று கருதினேன். ஆனால் மூன்று ஆண்டுகளின் முன் நான் யாழ்ப்பாணத்திற்கு வருகை புரிந்தபொழுது இங்குச் சிறுவர்களிலும் சிறுமிகளின் நிலையே கொழும்பில் உள்ளதிலும் பயங்கரமாக இருக்கக் கண்டேன்.

யாழ்ப்பாணத்துச் சிறுவர்களுக்கெனச் சைவக்கோட்பாடுகளின் அடிப்படையில் நடைபெறும் உயர் பள்ளிகள் பல இருந்தன. ஆனால் சிறுமிகளோ ஒன்று கிறிஸ்தவ கல்லூரிகளில் நுழைவனுமதி பெறல் வேண்டும். அல்லது தங்கள் படிப்பினைப் புறக்கணித்து வீடுகளிலேயே படிப்பின்றி இருத்தல் வேண்டும்; இவர்களின் பெற்றோர் கிறிஸ்தவப் பள்ளிகளுக்குச் செல்லும் தன் பிள்ளைகளுடைய உள்ளங்களில் ஏற்படும் நஞ்சுபற்றிப் பெரிதும் வருந்துவதையும் கண்டன முறையீடுகள் செய்வதையும் என்னால் காணமுடிந்தது. எனவே இந்தத் துன்ப நிலையினை சிறியரும், வளர்ந்தோருமான இந்து மாணவிகளுக்குத் தகுந்ததும், போதியதுமான பெரியதொரு கல்லூரியை அமைப்பதன் மூலம் போக்கி அவர்களின் உலக வாழ்வினில் ஆன்ம திருப்தியை ஏற்படுத்தலாம் என்று தீர்மானித்தேன்.

தமது செல்வத்தையும் உயர் நிலையினையும் உறுதுணையாகக் கொண்டு இராமநாதன் யாழ்ப்பாணத்திலேயே கல்லூரிகளை அமைந்தனரெனினும், தேசிய ரீதியில் எல்லா மக்களும் கல்வி பெறுவதற்கு அரசாங்கமே நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதை வற்புறுத்தவும் அதற்காகப் போராடவும் தவறவில்லை.

1881ம் ஆண்டுக் கல்விக்கென ஒதுக்கீடு செய்ய வேண்டிய நிதியினை அக்காலப் பொதுக் கல்வி இயக்குனரினாலே தயாரிக்கப்பட்ட உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதி பெறும் பாடசாலையிற் செய்தல் வேண்டும் என்று அந்நாட் குடியேற்றக் காரியதரிசி 1880ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி ஒரு பிரேரணையைச் சட்ட நிருபணசபைக் கட்டிடத்திலே பிரேரித்தார். இதனால் புதியவனவாக இலங்கையின் பல பாகங்களிலும் தோன்றிக் கொண்டிருந்த பாடசாலைகள் பெரிதும் பாதிக்கப்படுமென்பதையும், ஆரம்பக் கல்விபெறும் வாய்ப்பினைக் கூட இந்நாட்டுச் சிறுவர்கள் இழப்பர் என்பதனையும் இராமநாதன் உணர்ந்து மாணவர் வரவுச் சராசரியின் அடிப்படையில் உதவிநிதி வழங்கும் சரத்துத் திருத்தப் பிரேரணை ஒன்று கொண்டு வந்தார். இத்திருத்தமானது சர்வசனக் கல்விக்குப் பெரிதும் உகந்ததாயிருந்தது. குடியேற்ற காரியதரிசி திரு. ஜோன் டக்ளஸ் அவர்களின் பிரேரணையைத் திருத்துமாறு கோரி இராமநாதன் 1880ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் திகதி ஒரு சிறந்த சொற்பொழிவாற்றினார். "கல்வி வளர்ச்சியிலே நான் எப்பொழுதும் ஆழமான ஈடுபாடு கொண்டவன்" எனத் தொடங்கி, அவர் ஆற்றிய உரையில் அரசாங்கத்தின் கடமையினை மிகவும் வற்புறுத்துதல் புலப்படும். "பொது மக்களுக்கு வேண்டிய கல்வியினை அரசாங்கம் கொடுத்தல் வேண்டும் என்ற கோட்பாட்டினை ஒத்த வேறு எந்தக் கோட்பாடும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டதாயில்லை. எத்தனை தலைமுறை செல்லினும் மக்களுக்கு வேண்டிய பண்பாட்டை இக்கல்வியால் அளித்துவிடலாம் என்பது இயலாத காரியம். ஆனால் அவர்கள் தமக்குரிய வாழ்க்கை நிலைகளில் தம் கருமங்களைத் திறம்பட நடத்துவதற்கான கல்வி வழங்கப்படல் வேண்டும். எமது கடந்தகால ஆட்சியாளர்களின் கல்வி இலட்சியமும் இலங்கையிலேதான் இருந்தது."

இராமநாதன் தமது காலத்திலே வழங்கப்பட்ட ஆரம்பக்கல்வி - சுயபாஷைக்கல்வி - மிகவும் குறைபாடுடையதாய் இருக்கக் கண்டார். இதனைப் போக்குவதற்கு ஆங்கிலப் பாடநூலகள் சிலவாயினும் சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்க்கப்படல் வேண்டும் என்றும், இம்மொழிபெயர்ப்புக்களைச் செய்வோரை இந்தியாவிற் சன்மானம் அளித்து ஊக்குவதுபோல இங்கும் ஊக்குவித்தல் அரசாங்கத்தின் கடமையென்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1879ஆம் ஆண்டிலேயே சட்டநிருபண சபையில் அவர் எடுத்துரைத்தார். இம்மொழிபெயர்ப்பு நூல்கள் சிறப்பாக ஆரம்ப விஞ்ஞான அறிவினையும், ஒழுக்கவியலையும் மாணவர்க்கு அறிவுறுத்துவனவாய் இருத்தல் வேண்டும் என்பதும் அவரின் நோக்கமாய் இருந்தது. இது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு உகந்த நூல்கள் சிவபற்றியும் அவர் தமது பேச்சிலே சுட்டிக்காட்டினார்.

"சிங்கள, தமிழ் மாணவர் பண்பு நலத்திலேதான் குறைபாடுடையவர்களாய் விளங்குகின்றனர். எனவே இவர்களின் பண்புநல அபிவிருத்தியை அரசு குறிக்கொண்டு ஆணை செய்தல் வேண்டும். இந்நாட்டின் இளைஞர் சமுதாயம், துவேஷமின்றியும், ஒருதலைச் சார்பின்றியும், சபலமின்றியும் உயர்வாகச் சிந்தித்தற்கு அவர்களை ஆயத்தம் செய்தல் வேண்டும்."

மாணவரின் பண்பு நலத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஆங்கில ஒழுக்கவியல் நூல்களை மொழி பெயர்த்தல் வேண்டும் என்று குறிப்பிட்ட சேர். பொன்னம்பலம் இராமநாதன் தமிழிலுள்ள அற நூல்கள் இரண்டின் சில பகுதிகளுக்கு விளக்கமும் எழுதியுள்ளார். இவை மாணவர்களுக்குப் பெரும் பயன் அளிக்கவல்லன. 'ஔவை நாயகியின் ஆத்திசூடி மந்திர விளக்கம்' திருக்குறட் பாயிரமும் இராம தாதீயமும் (விளக்கம்) என்பன அவ்விரண்டு நூல்களுமாகும்.

ஏகாதிபத்திய ஆட்சி நிலவிய காலத்தில் கல்வியின் நோக்கம் அரசாங்கத்திற்கு உண்மையாய் நடந்து கொள்ளும் உத்தியோகத்தர் வகுப்பொன்றினை உற்பத்தி செய்வதாகவே இருந்தது. இவ்வாறு உற்பத்தி செய்யும் பொழுது இதற்காகப் பெருந்தொகைப் பணத்தினைச் செலவு செய்வதையும் அவ்வேகாதிபத்தியம் விரும்பவில்லை. இந்நிலையில் இராமநாதன் கல்வியின் நோக்கம் இவ்வளவு உறுதியாக இருக்க வேண்டிதில்லை என்பதையும், அதற்குச் செலவு செய்வதில் அதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலோபம் காட்டுதல் தவறு என்பதையும் ஆட்சியாளருக்குச் சுட்டிக் காட்டினார். "கல்வியின் பிரதிபலன் பவுண் - சிலிங் பென்ஸில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை என்பதை ஒருசிலருக்கு அறிவுறுத்தி அவர்களை ஒப்புக்கொள்ள வைப்பது எளிதாய் இல்லை. இவர்கள் கல்விக்கென 1867இற் செலவாகும் பணம் 1868 இலோ அல்லது 1869 இலேயோ திரும்ப கிடைத்துவிடல் வேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர். நான் கல்வியின் பயன்களில் சமூக அரசியல் முன்னேற்றங்களே பிரதானமானவை எனக்கருதுகின்றேன். கல்வி பெற்று உலகிடையே செல்லும் இளைஞன் ஒவ்வொருவனும் மக்களிடையே ஒரு சக்தியாய் விளங்கி அவர்கள் மீது தன் செல்வாக்கினைப் பதிந்துவிடுகின்றன. இவ்வாறு பதிந்தவை அவன் தன்னிலும் கல்வி குறைந்தோருடன் உரையாடுகையில் அவர்களின் அறிவை அபிவிருத்தியடையச் செய்கின்றன. இவ்வபிவிருத்தி படிப்படியாகவும் பலாத்காரமின்றியும் அவர்களின் நடத்தையை மாற்றி அமைந்து விடுகின்றன"

கல்வி வளர்ச்சி ஒன்றுதான் இந்நாட்டு மக்களின் அடிமைத் தளையினை அறுக்கவும், அவர்களைச் சுதந்திரராய்த் தலைநிமிர்ந்து நிற்க வைக்கவும் உதவவல்லது என்பதை இராமநாதன் நன்கு உணர்ந்திருந்தார் எனினும் கல்வியின் மூலம் தோன்றும் புதிய இனம் சாதாரண மக்களின்றும் விலகி அவர்களை எக்காலத்திலும் வழி நடத்தும் தலைவர்களாய் விளங்கும் என்று அவர் கருதியமை, இக்காலத்தவரால் விரும்பப்படத்தக்கது அன்று என்பதையும் மறுத்தல் இயலாது. மகாத்மா காந்தியைப்போலக் கல்வி, உடலால் உழைக்கும் உழைப்பிற்கு முக்கியத்துவமும் மதிப்பும் அளிப்பதாய் அமைதல் வேண்டும் என்று அவர் நினைத்தும் பார்த்தவரல்லர். இதற்குக் காரணம் இவரது உயர்குடிப் பிறப்பும் சூழலும், ஆங்கில மாமன்றக் கல்வியுமே என்றுதான் கூறல்வேண்டும். ஒருவகையிலே பார்த்தால் கல்விக்கும் தொழிலுக்கும் சம்பந்தமே இல்லையென்பதும் உடலால் உழைக்கும் தொழில்கள் படிப்பறியாப் பாமரர்க்கே உரியன என்பதும் இவரின் அழுத்தமான நம்பிக்கைகளாய் இருந்து வந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உமது வேலைகளைச் செய்வதற்கு வேலைக்காரர்களை நியமிக்க முடியாத அளவு மிக ஏழைகளாய் உள்ள பெற்றோர்கள் வீடுகளிலும் வயல்களிலும் பிள்ளைகளை வேலை செய்யக் கட்டாயப்படுத்துகின்றனர். இவ்வாறு வளரும் பிள்ளைகள் பாடசாலை செல்லும் வயது கழிந்ததும் தமது வாழ்க்கைக்காகக் கூலிகளாகவும், கமத்தொழிலாளர்காளகவும் மேசன், தச்சனாகியோரின் தொழில்களைச் செய்பவர்களாகவும் மாற வேண்டியிருக்கின்றது."

எனினும், கல்விவாய்ப்பும் பெறுவதில் எமை என்றும் செல்வர் என்றும் வேறுபாடு இருத்தல் கூடாது எனவும் இக்கல்வி வாயப்பினை அரசாங்கமும் பாரபட்சம் இன்றி யாவர்க்கும் வழங்கல் வேண்டும் எனவும் பாடுபட்டதோடமையாது தாமே இரு பெரிய கல்விக்கூடங்களையும் நிறுவி வழிகாட்டிய வகையில் சேர்.பொன். இராமநாதன் இந்நாட்டின் கல்வித்துறைக்கு மாபெரும் பணியாற்றியுள்ளார் என்பது யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றேயாகும்.

*நன்றி : ஈழநாடு*
*16.04.1974*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதனை படைத்தவர் அமரர் நவம்

வெண்மையான வேட்டி; அதற்கேற்ற வகையில் மேலங்கி; மாநிற மேனி; அடர்த்தி குறைந்த முடி; அன்பு பொழியும் முகம். இவை அமரர் நவத்தாரின் புறத்தோற்றம். அவருடன் கூடப்பிறக்காவிடினும் பேராதனையில் படிக்கின்ற காலத்தில் இருந்து அரை நூற்றாண்டிற்கு மேல் இரட்டையர் போலவே பழகினோம்.

வெள்ளை உள்ளம்; நிதானமான சுபாவம்; கடமையிலே கண்; பிறர் விடயத்தில் தலையிடாத மனப் பக்குவம்; தவறாயின் கண்டிக்கும் இயல்பு; மாணவரின் நலனுக்காக தன்னை அர்ப்பணித்தல்; பேசும் பேச்சில் உறைப்பு; விளைவு இனிமையாக இருக்கும். இது அமரர் நவத்தாரின் அகத்தோற்றம்.

வாழ்க்கை என்னும் பாசறையில் மலையும் கடலும் கடந்தவர்; புகழ் பெருமை என்ற பொய்த் தோற்றங்களில் உழலுவதை விரும்பாதவர்; புகழைத் தேடவேண்டும் என ஆசைப்படவுமில்லை. அதனால் தான் மின்னாமல் முழங்காமல் விண்ணுலகம் சென்றுவிட்டார்.

மொழி, இலக்கியம், இலக்கணம் ஆகியன ஒன்றையொன்று தழுவியும், ஒன்றுக்கொன்று துணை நின்றும் வளர்வன. இம் மூன்றும் மொழியைப் பயன்படுத்துவோரின் கரம் பற்றியே நடைபயிலும். இத்தகைய திறன் ஒரு சிலரிடம் மட்டுமே உண்டு. அவர்களில் நவத்தார் பிரபல்யம் பெற்றவர். இன்று இலக்கண பாடத்தைக் கற்பிப்போருக்கு தெளிவான வழிகாட்டுநர் இல்லை. இதனால் மாணவர் தேவையற்ற குழப்பத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளாகின்றனர். தமிழ் இலக்கணத்திற்கு அஞ்சி தமிழ்மொழியைக் கற்காமல் ஓடி ஒழித்தவர்களும் உளர். இக் குறைபாட்டை நீக்கி தமிழ்மொழிக்கு உயிர் கொடுத்தவர் அமரர் நவத்தார். சுருக்கமாகக் கூறின் ஒரு கற்றல் தமிழ்மொழி வள நிலையம் மூடப்பட்டு விட்டது எனலாம்.

வடமராட்சிப் பகுதியில் அளவையியல் என்ற பாடத்தை அறிமுகப்படுத்தி அதனை சாதனை புரிந்த மாமனிதனே அமரர் நவத்தார். அளவையியல் கற்பிப்போருக்கு இலக்கண அறிவு இன்றியமையாதது. கற்பித்தல் தொழிலை தொடங்கிய நாள் முதல் அளவையியலை கண் போல மதித்தவர். வடமராட்சி மண்ணுக்கு அளவையியலை புடம்போட்ட வானத்து விடிவெள்ளி போல விளங்கினார். இன்றும் பலரது உள்ளங்களில் அவர் வாய்வழியே தவழ்ந்து வந்த தர்க்கம் நடமாடிக் கொண்டேயிருக்கின்றது. இப் பாடத்தினூடாக பல்கலைக்கழகம் சென்ற பலர் உயர் பதவி வகிக்க வழிசமைத்த அமரர் அளவையியலின் தந்தையேயாவார்.

வடமராட்சியில் பட்டிமன்றங்களில் தர்க்க நியாயங்களை வாதிடுவதில் வல்லவராக விளங்கியவர். பட்டிமன்ற வரலாற்றில் அது ஒரு பொற்காலம். எப்பொழுதும் இறுதிப் பேச்சாளராகவே பேச விரும்புவார். காரணம் எல்லோருக்கும் கனதியான நியாயங்களைக் காட்டும் சொல் வன்மையில் சோர்விலாதவனாக விளங்கியவர். வில்லுக்கு விஜயன் என்றால் சொல்லுக்கு நவத்தார்தான்.

பல பாடசாலைகளில் கல்லூரிக் கீதம் எழுதும் கவிஞனாகவும், கல்லூரிக் கீதங்களை விமர்சனம் செய்யும் திறனாய்வாளனாகவும் விளங்கியவர். இவரது இத்தகைய முயற்சிக்கு உரமூட்டியவர் பண்டிதர் க. வீரகத்தி என்பதில் ஐயமில்லை. வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் பாடசாலைக் கீதம் அமரர் நவத்தாராலேயே எழுதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தினங்களின் பெயரையே தன் பெயராகக் கொண்டவன். கார்மேகம் போல் காட்சிதந்து கல்லறையில் செல்லுமுன் மாணவ சமுதாயத்தினை உயர்நிலைக்கு கொணர்ந்தவன். தமிழ் வித்தகனே விண்ணில் ஒரு தமிழ் சங்கம் அமைப்பாய்.

"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் - சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து"

***கி. நடராசா***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறக்க முடியா ஒரு ஆசானின் நினைவுகளில்...

மறக்கமுடியா
ஒரு ஆசானின்
நினைவுகளில்
நின்றமுகிறது மனம்
நவம் சேர்
ஆரம்பத்தில்
அளவையியல்
ஆசானாகத்தான்
அவர் அறிமுகம்
மொடேன் கல்வி நிலையமதில்
அவரிடம் கற்ற
அளவையியல்
எப்படி மறக்கும்
எங்களுக்கு
இடையிடையே
நகைச்சுவையிலும் கலந்து தரும்
அவர் பாணி தனிப்பாணி
தாலியக்கட்டுவாரே
தவ்வல்கள்
அடிக்கடி அவர் வாய்கள்
உச்சரிக்கும்
தனித்துவமான சொற்கள்
CD 125 மோட்டர்
சைக்கிளில்
அந்த வயதிலும்
ஓடி வரும் அவர் அழகு
தனி அழகு

எதையும் எளிமையாக்கி
கற்பித்திடுவார்
பெறுகை முறையென்ன
விஞ்ஞான முறையென்ன
அவர் வாயால்
கேட்ட அத்தனையும்
இன்றும் மனப்பாடம்
வடமராட்சி
அளவையியல்
ஆசான்களின்
மூத்த குரு அவர்
மறுவளமாய்
தமிழ் மீது அவர் கொண்ட
அறிவாழம்
பண்டிதர் வீரகத்தியிடம்
கற்ற இலக்கண
அறிவதை
தமிழ் முதுமாணி
வகுப்புக்களில்
தொல்காப்பிய
நன்னூல் இலக்கணமாய்
அணியாப்பு
இலக்கணமாய்
அவரிடம் கற்றவை
எப்படி மறப்போம்
இடையிடையே
பல கதைகள் சொல்வார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் பழமையும்
ஆழம் கண்டவர்
அதனால்தான்
அவர் நவம்
எமக்கு கிடைத்த தவம்
அவரிடம் யாப்பிலக்கணம்
பயின்றவர் பலர்
தேமாவும் புளிமாவும்
தெவிட்டாமல்
வெண்பாவை கற்றுத்
தந்தார் இன்று
திதி வெண்பா
எழுதவிட்டு
விதிவசத்தால்
விடைபெற்றார்
அனுபவம் பெட்டகமாய்
வாழ்ந்தவரே
பட்டிமன்ற நடுவர் முகம்
மற்றொரு ஆற்றல் முகம்
உம் அனுபவத்தை
அடுத்த தலைமுறைக்கு
ஆவணப்படுத்த
முயன்றும் முடியாக்
குற்றத்துடன்
உம் மாணவனாய்
உம் கனவுகள்
சுமந்து நடக்கிறோம்
உம்மைப் போல்
ஆசான்கள்
சாவதில்லை
நீர் தந்த கல்வி போல்
என்றும்
அளவையியலால்
தமிழால்
நிலைத்திருக்கும்
உம் புகழ்
உம் மாணவர்
மனங்களில்
நீர் ஏற்றிவிட்ட திரிகள்
ஆயிரம் விளக்குகளை
ஒளிர வைக்கும்
உம் பவளவிழா
ஆண்டினிலே எமை
பரிதவிக்க
விட்டுச் சென்றவரே
உம்மைப் போல்
ஆசான்களிடம்
கற்றதே எம் பெரும் பேறு
இன்னும் இன்னும்
எழுதிடலாம்
உம்மைப் பற்றிப்
பலநூறு நிறைவாய்
உமக்கெம் ஆத்ம
அஞ்சலியோடு
என்றும் உமை மறவா
மாணவர் சார்பில்

*- வேல் நந்தகுமார்*
*(விரிவுரையாளர் கோப்பாய்*
*ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவண்ணா

*பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா*

நவண்ணா !
உங்களை எல்லோரும் நவம்சேர் என்றுதான் அழைப்பார்கள்
என்னை விட மூன்றுவயது மூத்தவர் நீங்கள்
ஆனால் நான் உங்களிடம் படித்தது பலபேருக்குத் தெரியாது
அளவை இயலை உங்களிடம் படித்தேன்
உங்களை ஆசிரியனாக அடையுமுன்னரே "நவண்ணா" என்று
அழைக்கத் தொடங்கிவிட்டேன்
வாணி கலைக்கழகம்
பண்டிதர் வீரகத்தியின் இலட்சியக்கனவு
வாணியில் எனக்குச் சிரேஷ்'ட மாணவன் நீங்கள்
எனக்கு நீங்கள் எப்போதும் சிரேஷ்டர்தான்
பண்டிதரிடம் பாடங்கேட்பது கடினம்
அவருடன் பழகுவது அதைவிடக் கடினம்
அவர், சிலவேளைகளிலே மந்த மாருதமாக வீசுவார்
சிலவேளைகளில் சண்டமாருதமாக வீசுவார்
அவர் இயல்பை அறிந்து படித்துப் பழகி
அவரை உள்வாங்கியவர் நீங்கள்
அவரின் இலக்கண ஊற்றும் ஓட்டங்களும்
உங்களுக்கு ஊடாகவே பரவிப் பாய்ந்து
எனது இலக்கண "வாரிசு நவம் தான்" என்று
அடிக்கடி கூறுவார். அத்துடன் எனது சில
பழக்கங்கள் அவனிடம் உண்டு
என்று பொடி வைத்தும் கூறுவார்
வாணியை உங்கள் உயிராக நேசித்தீர்கள்
அதனாலே உங்கள் பிள்ளைகளின் பெயர்களிலெல்லாம்
வாணி வாஞ்சையை
நிறைவு செய்தீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம் தனது இலக்கணவாரிசு" என்று அவர் கூறியதை
நவண்ணா நிறுவிய பலநிகழ்வுகள் எனக்குத் தெரியும்
என்னைத் தனது இலக்கிய வாரிசு என்று கூறுவார்
அதனை ஓரளவுக்காயினும் நிறுவ முயன்றிருக்கிறேன்
நீங்கள் இலக்கணத்திலே முதுதத்துவ மாணிப் பட்டம் பெற்றீர்கள்
நவண்ணா !
எனக்கும் உங்களுக்கும் உள்ள உறவு
நேற்று முன்னாளில் வந்ததல்ல - அது
நீண்ட நெடும் நாளாகத் தொடர்ந்து வந்தது
உங்கள் அறிவு, ஆளுமை, ஆற்றல், அஞ்சாமை
அனைத்தையும் ஒருங்கே தரிசித்தவன் நான்
எனக்கு நன்றாக நினைவிருக்கிறது
ஒருமுறை க.பொ.த தமிழ் உயர்தர வினாத்தாளில் வந்த
இலக்கண வினாவைப் பிழையானது என நீங்கள்
வாதிட்டீர்கள்
அந்த வினாவைப் போட்ட தமிழ்ப் பேராசிரியர்
(அவர் இப்போது காலமாகிவிட்டார்)
அசந்து போய்த் தனது பிழையை ஒத்துக் கொண்டார்
உங்களின் அறிவுக்கும் அஞ்சாமைக்கும் இது ஒரு பதச்சோறு

## II

இலக்கணத்தோடு பின்னர் நீங்கள் அளவைஇயல் ஆசான் ஆகினீர்கள்
நவம் என்றால் லொஜிக் லொஜிக் என்றால் நவம் - இப்படி
இருந்த நாள்கள் பல
பகைக்குப் பணிந்து போகாத நீங்கள்
புகைக்குப் பணிந்து போனதை நான் அறிவேன்
யாழ்ப்பாணம் வரும் போதெல்லாம்
என்னிடம் வருவீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் மகள் பல்கலைக் கழகம் வந்தபோது
என்னிடம் வந்துஉரையாடியதை எண்ணிப் பார்க்கிறேன்
நினைவுகள் நீண்டு செல்கின்றன

## III

நான் தமிழ்த்துறைத் தலைவராகவும், முதுகல்விமாணி
இணைப்பாளராகவும் பணியாற்றியபோது
உங்களைப் பல்கலைக் கழகத்திற்கு வருகைதரு
விரிவுரையாளராக நியமித்தேன்
மாணவர்கள் உங்கள் விரிவுரையாளரைப்பற்றி
என்னிடம் விதந்து கூறும் போதெல்லாம்
புளகாங்கிதம் அடைந்திருக்கிறேன்
உங்களிடம் நான்கு அணி மாணவர்கள்
இலக்கணம் பயின்றார்கள்
இன்று யாழ்ப்பாணத்தில் விதந்து பேசப்படும்
தமிழ் அறிஞர்கள் பலர் உங்களின் மாணவர்கள்
நீங்கள் பல்கலைக் கழகம் செல்லும்போது
பண்டிதரிடம் வந்து கதைத்தது கூட எனக்கு
நினைவிருக்கிறது
நீங்கள் நல்லதொரு அறிஞன் மாத்திரமல்ல
நல்லதொரு இரசிகனும்
நல்லதொரு மனிதனும் கூட
நான் உங்களிடம் படித்தது
நீங்கள் என்னுடன் உண்டுகுலாவி
இருந்தது
உங்கள் மோட்டார் சைக்கிளில்
பின்னால் இருந்து யாழ்ப்பாணம் வந்தது
றோயல் கல்லூரி விடுதியிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைக் கடமைக்காகப் போய் ஒன்றாய் இருந்தது
இந்திரா கபேயில் பிளேன்ரி குடித்தது
நீங்கள் எழுதிய கவிதைகளை எனக்குக் காட்டி மகிழ்ந்தது
இப்படி, இப்படி நினைவுகள்
மழைவிழத் துளிர்க்கும் கோரைப்புல்லாய்
முகம் காட்டுகின்றன
வாய்க்காற் கரையின் அறுகம்புல்லாய்
நினைவுகள் படர்கின்றன
நவண்ணா ! உங்கள் நல்ல மனதிற்கும்
மற்றவர்களுக்கு உதவும் தன்மைக்கும்
உங்கள் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
எல்லோரும் நல்லபடி வாழ இறைவன் அருள்புரிவார்
தமிழ்க் கல்வி மரபிலே உங்களின் இடம்
எப்போதும் காலியாகவே இருக்கும்

ஓம் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞாபகம் வருதே...

அன்பான மாமா,

உங்களை நினைக்க என் கண்கள் கண்ணீரைச் சொரிகின்றன, உங்களைப் போன்ற அன்பான, அறிவான, பண்பான, பாசமான மாமா கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். நீங்கள் என்றும் என்னைக் கடிந்தது கிடையாது. பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு எங்களது திருமணத்தின்பின்பு நீங்கள் சொன்ன அறிவுரைகள் இன்றும் என் நினைவில் உள்ளன. அந்த அறிவுரைகளின் படி விட்டுக் கொடுப்புகளுடன் இன்றும் சந்தோசமாக வாழ்ந்து வருகிறோம்.

இப்போது உங்களுக்கு வந்த சுகவீனம் போன்றே ஏழு வருடங்களுக்கு முன்பும் உங்களுக்கு சுகவீனம் ஏற்பட்டது. அப்போது உங்கள் மகன் உங்களை வைத்தியத்திற்கு இந்தியா அழைத்துச் சென்று அப்பலோ மருத்துவ மனையில் தங்க வைத்து விசேட சிகிச்சை அளித்து ஏற்பட இருந்த உயிராபத்தை போக்கினார். அதனைப் போன்றே இம் முறையும் உங்களைக் காப்பாற்றலாம் என்ற நினைவில் லண்டனிலிருந்து வந்தார். ஆனால் அவர் உங்கு காலடி வைக்க முன்னே காலன் உங்கள் காலடிக்கு வந்து அழைத்துச் சென்றுவிட்டான்.

உங்களைக் காப்பாற்ற முடியாத ஏமாற்றமும், கவலையும் உங்கள் மகனை வாட்டி வதைக்கின்றது. இரண்டு நாள் முன்னதாக தான் வந்திருந்தால் அப்பாவைக் காப்பாற்றி இருக்கலாமே எனக் கண்ணீர் வடிக்கின்றார்.

நவம் மாஸ்டர் இல்லாத நெல்லியடி வீடு சோலை இழந்து வெறிச்சோடிக் காணப்படுகின்றது. எத்திசை பார்த்தாலும் நீங்கள் நடமாடிய, உறவாடிய இடங்களே கண்ணில் தெரிகின்றன. நாங்கள் உங்களோடு தங்கியிருந்த நாட்களில் நீங்கள் போட்டுத் தந்த தேத்தண்ணீரின் சுவை நாவில் தித்திக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவின் தேநீரில் பேரப்பிள்ளைகளும் சுவைகண்டனர். நீங்கள் எங்களையும் உங்கள் பேரப்பிள்ளைகளையும் மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டது ஞாபகம் வருகின்றது.

நீங்கள் போன பின்புதான் உங்களைப் பற்றியும் உங்கள் பெருமைகளையும் மேலும் அறிந்து கொண்டுள்ளேன். facebook இல் நூற்றுக் கணக்கானவர்கள் நீங்கள் படிப்பித்து நாங்கள் இன்று நல்ல நிலைமையில் இருப்பதை இப்போதும் பதிவு செய்து கொண்டிருக்கின்றார்கள்.

மாமா, நீங்கள் எங்களை விட்டு மறைந்தாலும் நாம் என்றும் உங்கள் நினைவில் வாழ்வோம்.

*அன்புடன்*
*உங்கள் ஆசை மருமகள்*
***கங்கா வாணிதாசன்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் உயிர்த் தந்தை

எங்களுக்கு உயிர்தந்த தந்தை இன்று உயிருடன் இல்லை என்பதனை எங்களால் நம்பவே முடியவில்லை. உங்களின் மறைவின் பின்னர் தான் உங்களின் புகழ் எங்களுக்கு மேலும் தெரிகின்றது. இன்று வரை உங்களுடன் பணிபுரிந்த ஆசிரியர்கள், உங்களிடம் படித்த மாணவர்கள் உங்களின் பெருமைகளைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்.

மாணவர்கள் தாங்கள் எவ்வாறு படித்து பயனுற்ற கதைகளைச் சொல்லும் போது நீங்கள் மாணவ சமுதாயத்திற்கு எவ்வளவு பாரிய இழப்பு என்பது தெரிகின்றது.

நாங்கள் மட்டும் அழவில்லை. உங்களிடம் படித்த பல மாணவர்கள் அழுகின்றார்கள், facebook இல் நூற்றுக் கணக்கான செய்திகளை பதிவு செய்து செய்துள்ளார்கள்.

காலை 05.00 மணிக்கு எழுந்து வீடு கூட்டுவீர்கள், முத்தம் கூட்டுவீர்கள், பூப்பறித்து கடவுளுக்கு வைப்பீர்கள், பின்பு அம்மாவுக்கு தேநீர் கொடுப்பீர்கள் அப்பா, ஆனால் இன்று இவற்றையெல்லாம் விட்டு எங்கு சென்று விட்டீர்கள்? மரங்கள் நிறைய பூக்கள் பூத்துக் கிடக்கின்றன, அதைப் பறிப்பதற்கு நீங்கள் இல்லையே அப்பா? உங்களைத் தேடி பலர் வருவார்கள், இனி யார் வருவார்கள்? தொலைபேசி மணி கூட அடிப்பதில்லை.

நாங்கள் வெளிநாட்டில் இருந்து உங்களைப் பார்க்க வரும்போது என்ன வேண்டும் என்று கேட்டால் ஒன்றும் வேண்டாம் என்று சொல்வீர்கள், நீங்கள் எதற்கும் ஆசைப்பட்டதில்லை. பிள்ளைகளுக்கு எந்தவொரு கஷ்ரத்தையும் கொடுக்க மாட்டீர்கள். இதற்கு மாறாக நீங்கள் எங்களை எப்படி சந்தோஷமாகப் பார்க்க முடியுமோ அப்படிப் பார்த்துக் கொண்டீர்கள். நாங்கள் வந்து போகும் மட்டும் எங்கள் பின்னாலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிவீர்கள், நாங்கள் பத்திரமாகத் திரும்பச் செல்ல வேண்டுமென்பதில் அவ்வளவு அக்கறை உங்களுக்கு.

அம்மா நீங்கள் இல்லாத வெற்றிடத்தை தற்போது உணர ஆரம்பித்துள்ளார். நாங்கள் மூவரும் அவவைக் கவனமாகப் பார்த்துக் கொள்வோம் அப்பா.

நீங்கள் எங்களை விட்டுப் பிரிய முன்னர் தங்காவிடம் உங்களது தங்கத்தைக் (motor cycle) கவனமாகப் பார்த்துக் கொள்ளச் சொன்னீர்கள், அப்படியே பார்த்துக் கொள்வோம் அப்பா, நீங்கள் போன பின்பு உங்களது motor cycle ஐ தொட்டால் உங்கள் ஞாபகம் தான் வருகிறது.

கைநிறைய பணம் சேர்த்தால் போதாது, சேர்த்த பணத்தில் கணிசமான பங்கை நல்ல சமூக காரியங்களுக்கு செலவிட வேண்டும், ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று சொல்லித் தந்தீர்கள், அதைப் பின்பற்றி இதுவரை பல உதவிகள் செய்துள்ளோம், இனியும் உங்கள் பெயரால் மேலும் பல உதவிகள் செய்வோம். குறிப்பாக ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவி செய்வோம்.

அப்பா, நீங்கள் கல்விச் சமூகத்திற்கு பாரிய தொண்டாற்றிச் சென்றுள்ளீர்கள், குறிப்பாகத் தமிழ் கல்விச் சமூகத்திற்கு, நீங்கள் இல்லாதது பாரிய இடைவெளியைத் தோற்றுவித்துள்ளது.

இந்த உலகில் ஒரு மனிதன் எப்படி சிறப்பாக வாழ வேண்டுமோ அப்படியே சிறப்பாக வாழ்ந்து சென்றுள்ளீர்கள், எங்கள் தந்தையின் பாதச் சுவடுகளை நாமும் தொடர்வோம்.

*அன்புடன், பிள்ளைகள்*

***வாணிதாசன், வாணி, வாணிதரன்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Our Dearest Appappa*

When we heard that you passed away, we were incredibly heartbroken, we never really think that those so near and dear to us will really pass, so we know this must be especially hard on you and we can't imagine what you are going through.

Appa visited you a week ago before you passed away as you had a serious illness. Appa then returned in a week's time mentioning that you'll be ok hoping that this will be the case. Your illness became even more serious and Appa flew to Sri Lanka to see you for possibly for the final time. However, Appa was too late, we wanted to tell you this, so you know how much your son cared for you. Once you died, we immediately came to see you as a family. When we got there, we saw Appa crying, this was the first time we saw him crying so this was a particularly sad and difficult time for him. We took some time to think about Appa's emotions and how you were one of the most important people in his life, this made us extremely sad. We also thought about what you have done for us, making our stay in Sri Lanka enjoyable and are hugely appreciative for everything you have done for us. For example, you took us on motorbike rides which we thoroughly enjoyed every day, you bought us Coke and Necto before we even arrived knowing that we enjoy drinking in the hot weather and you filled our bath in the outdoors which you know we enjoy bathing there, everything you have done for us we thoroughly appreciate and we would like to give you a huge THANK YOU! The next time we visit Sri Lanka it wouldn't be the same without you which is why we are deeply saddened by your loss.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

We are deeply at loss for words, we know there is nothing in the world that will make your loss easier, love knows no boundaries. Even though you are no longer physically with us, your spirit is always around us. The loss of someone dear to us is never easy. I hope all the cherished memories that you have of us brings you some light during this dark time.

You have been such a great inspiration to all of us, through the remarkable things you have done throughout your beautiful life such as being a school teacher teaching thousands of students. One day, Appappa, while you are in heaven, we will make you proud, you will be dearly missed by everyone and will most importantly never be forgotten.

***Love from your dearest grandchildren***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் இலக்கணமே இறையடியை நாடினையோ!



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08.07.1944 | 08.03.2019 |

அமரர்

# கணபதிப்பிள்ளை நவரத்தினம்

பன்னீருயிரும் பதினெட்டு மெய்யும்
பதினாறொரு இருநூறுயிர மெய்யும் ஆய்தமும்
பல்லியமாய் கற்றுணர்ந்த பேராசானே
பகலவனாய் நீயிருந்தாய் எங்கு சென்றாய்!

அல்லையூர்த் தங்கத் தாயீந்த ரத்தினமே
அகரமுதல எழுத்தெல்லாம் ஆழக்கற்றறிந்த
அளவையியலாசானே ஆதிமொழி வித்தகனே
அரனடியை நாடினையோ சாந்தி காண்க

எழுத்தியலின் எவரெஸ்ரே! எமதருமை யாசானே
புதுவியலின் பகலவனே பாசமிகு தோழமையே
தங்கக் கலசமாய் தமிழியலைத் தந்த
எங்கள் மகாகுருவே இறைவனடி ஏகினையோ!

நவத்தின் மூச்சால் நற்றமிழை நாம் கற்றோம்
நவத்தின் கூர்ப்பால் அளவையியலும் அறிந்தோம்
நவத்தின் ஸ்பரிசத்தால் நண்பர்களாய் நாமிருந்தோம்
நவமே எமைவிட்டு எங்குதான் சென்றனையோ!

பட்டிமன்ற மேடைகளிற் தமிழ் முழங்கி
பல்லாண்டு காலம் தமிழ் பொழிந்தாய்
எத்திசையும் உன்வாதம் கேட்டு நின்றோம்
எமை யெல்லாம் ஏங்க விட்டுஎங்கு சென்றாய்.

தமிழுக்கு உயிர்கொடுத்த தவமகனே
நவமான பல கதைகள் நவின்றவனே
நல்லதொரு ஆத்மாவாய் நமக்கிருந்தாய்
நமை யெல்லாம் தவிக்க வைத்து எங்கு சென்றாய்!

நன்னூலார் காட்டும் நல்லாசானாய்ப்
பள்ளிதோறும் தமிழியலைப் புகட்டி வைத்து
எண்ணரிய புலமையரை மண்ணுக்கீந்த
எங்களன்பு நாவலனே சாந்தி காண்க

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நட்பின் இலக்கணங்கள்

தமிழ்ப்பூங்கா நெல்லியடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வளர்த்த தவமகனே
# தரணி விட்டகன்றனையோ!

தோற்றம்

08 . 07 . 1944

மறைவு

08 . 03 . 2019



## அமரர்
# கணபதிப்பிள்ளை நவரத்தினம்

அல்வைப் பதிமலர்ந்து அழகு தமிழ் பயின்று
எல்லையிலா மாணவரை அறிவூட்டி வாழவைத்த
பல்லோரும் போற்றுகின்ற பண்புநிறை ஆசானே
பரனடியை நாடினையோ! சாந்தி காண்க.

பூங்காவை யுன் புகலிடமாய் நேசித்தாய்
பூங்காவின் தந்தையாய் பொலிவோடு வாழ்ந்து
தாய்த் தமிழைத் தவறின்றிச் செப்பமிட்டுத்
தரணிவிட்டேகினையோ சாந்தி காண்க.

நட்புக் கிலக்கணமாய் நமக்கிருந்தாய்
நாடறிந்த ஆசானாய்ப் பணிபுரிந்தாய்
நற்றமிழை மாசின்றிச் சிறக்க வைத்து
நாதனடி நாடினையோ சாந்தி காண்க.

அஞ்சாமை; நேர்மை அறிவுடமை யாவும்
அணிகலனாய்ப் பூண்ட பேராசானே
ஆண்டு பல கழிந்தாலும் சாகமாட்டாய்
அருந்தமிழால் நீ யென்றும் வாழ்வாய்!

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தமிழ்ப்பூங்காவின் தளிர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தாயின் மடியில்
08*07*1944

ஆண்டவன் அடியில்
08*03*2019

(வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியன் நலன் விரும்பியும் காணிக் கொள்வனவுக்கு பெருந்தொகை பணத்ததை நமது குடும்பத்தின் சார்பில் வழங்கிய நன்கொடையாளர்)

## அமரர் – கணபதீப்பிள்ளை நவரட்ணம்

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு
நாமும் மிகுந்த துக்கத்திலாழ்ந்துள்ளோம்
இறப்பு என்பது மனிதனின் மறுக்கமுடியாத நிஜம்
இதனைத் தாங்கித்தான் ஆகவேண்டுமென்பதும் விதியே!
ஆயினும் எமது அன்புக்குரியவரின் இழப்பு என்பது
எம்மால் தாங்கிக்கொள்ள முடியாததே! ஜீரணிக்க முடியாததே!
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி,
அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலை அபிவிருத்தி சங்கம்
நலன் விரும்பிகள் சங்கம்
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
1944
07
08



விண்ணில்
2019
03
08

(எமது கல்லூரியின் நலன்விரும்பி திரு நவரத்தினம் வாணிதாசன் அவர்களின் அன்புத் தந்தையும்,
எமது கல்லூரியின் பழைய மாணவி திருமதி கங்கா வாணிதாசன் ஆகியோரின் மாமனாருமாகிய)

## அமரர் **கணபதிப்பிள்ளை நவரத்தினம்** (நவம் மாஸ்ரர்)

(பிரபல ஆங்கிலம், அளவையியல் ஆசிரியரும், சிறந்த பட்டிமன்றப் பேச்சாளரும்)

அகவை காலம் அகலும் அளவினில்
அளவியலுடன் தாய்மொழியும் பயிற்றுவித்த
விவாத விற்பன்னனே சொற்பொழிவின் செம்மலே
விம்மலுடன் நும்கதை நாம்பேச விண்ணகம் சென்றனையோ?

நவத்தார் என்று நயமுடன் நாம் அழைக்கும்
நல்லாசன் நவரத்தினம் ஐயா - நும்
கச்சிதங்கள் கண்டு காலன் கண்பட்டு - நாமெல்லாம்
காத்திருந்து விழிநீர் சொரிய காததூரம் சென்றதேனய்யா?

தெளிந்த உள்ளமும் நேர்கொண்ட பார்வையும்
துணிந்த நின்பேச்சும் துல்லியமான கருத்தும்
காத்திரமான வாரிசு மூன்றொடு இல்லாளும்
கண்ணியமாய் காத்தவனே கண்மூடியதேனய்யா?

சுற்றம் சூழலில் நவத்தின் ஈரலாய்
சூழ்ந்திருப்போர் நவகதைபேசி இரங்க
சுந்தரப்புன்னகை வடிக்கும் சுந்தரனே
கூற்றுவனும் நும்மீது பகை கொண்ட கதை கூறாயோ?

நிதிக்கொடைக்கு மகனை ஈந்த உத்தமனே
உடுப்பிட்டி மகளிர்கல்லூரி தனில் சென்றவர்க்கு
ஊர்போற்றும் திறனறைக்கு அடியிட்ட தந்தையே
உன் பணி நிறைவு செய்த தனையனை தவிக்கவிட்டதேனய்யா?

**ஓம் சாந்தி !!! சாந்தி !!! சாந்தி !!!**

பாடசாலைச் சமூகம்,
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில்
1944.07.08

விண்ணில்
2019.03.08

யா/கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியின் 1992ம் ஆண்டு O/L Batch சகமாணவன்
ந.வாணிதரன் அவர்களின் அன்புத்தந்தை

அமரர்

## கணபதிப்பிள்ளை நவரத்தினம்

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு நாம்
துயர் கொள்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**யா/கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி**
**1992, O/L Batch**
கரவெட்டி, பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா
நண்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில்
1944.07.02

விண்ணில்
2019.03.08

யா/கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியில் பல்லாண்டுகள் மாண்புறு
கடமையாற்றிய சீர் மிகு ஆசான் .....

அமரர்

## கணபதிப்பிள்ளை நவரத்தினம்

மொழியும் அளவையும் இயலாய் மலர்ந்தன
உம்மால்
அமிழ்தினும் இனிய மொழி நடையால் எழுந்தனர்
பிள்ளைகள்
பொழுது தெரியாது விழி நாடிப் பயின்றனர்
அழுது கொண்டே சோர்கின்றோம் உம்
பிரிவு நாடி
அஞ்சுதல் இன்றி மொழிவாண்மை ஈந்தீர்
பிஞ்சுகள் மன்றில் பேசிட வைத்தீர்
நெஞ்சு வென்றிடப் பட்டிமன்றம்
ஊட்டினீர்
துஞ்சுதல் இன்றி ஒளி கொடுத்து மாண்டீர்

விக்னேஸ்வரக் கல்லூரியின்
மாணவர் பெறுபேற்றில் ஏற்றம் தந்தீர்
புதுத்தேற்றம் தந்தீர்
உயர் மாற்றந் தந்தீர்

அன்னாரின் மறைவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், மற்றும் குடும்ப உறவுகள் அனைவருக்கும் ஆறுதல் தேறுதல் கூறி ஆத்மா சாந்தி பெற அஞ்சலிக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
**பழையமாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர்**
**யா/கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி - கரவெட்டி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவுக் கண்ணீர்

அறிவுப் பசி போக்கிய அமுத சுரபி

## அமரர் கணபதிப்பிள்ளை நவரத்தினம்

மண்ணில்
1944.07.08



விண்ணில்
2019.03.08

வீட்டுக்காக வாழாது மாணவர்க்காக வாழ்ந்து கார்மேகம் போல்
காட்சி தந்து கல்லறையில் செல்லும் முன் கலையமுதம் படைத்த,

சொல் அழகனே!
தமிழ் இலக்கண வித்தகனே!
அளவையியலின் தந்தையே!
எம் நெஞ்சங்களில் நீங்காது நிலைத்திருப்பாய்
நடமாடும் தெய்வம் நவம்
நாடு போற்றும் அறிஞன் நவம்
மானிடர் போற்றும் மனிதர் நவம்
பல்லாயிரவரை கல்வியால் உயரவைத்தவன் நவம்
இவை அமரரின் வழித் தோன்றல்களின் இதய ஒலி

தன்னிகரில்லாத தமிழ்மொழியை
தண்ணொளி பரப்பி
இலக்கண வழுவின்றி
இயம்பிய சொல்லேருழவன்

அளவையியல் என்ற பாடத்தை
வடமராட்சி மண்ணிலே முதலில் விதைத்து
அதனை வளர்த்தெடுத்ததில்
உமக்கு நிகர் யாரும் உண்டோ

பட்டிமன்றம் பல கண்டு
பக்குவமாய் வாதிடும் இரட்டையரில் ஒருவனாய்
தர்க்கிக்கும் ஒரு சமுதாயத்தை
உருவாக்கி வைத்தாய்

தொல்காப்பியனாகவும் பார்த்தோம்
சிலேடை மொழிவதில் காளமேகமாகவும் கண்டோம்
என் செய்வது
காலனவன் கடுகதியில் கண்மூடித்தனமாக
எம் சமுதாயத்தை தளர்வடையச் செய்தானே

தேவர் பாதம் நோக்கிச் செல்வாய்
இறை ஆசி உண்டு
பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தவர்க்கு
எமது அனுதாபம்.

**ஆசிரியர்கள், மாணவர்கள், நிர்வாகத்தினர்**
**மொடேண் கல்வி நிலையம்**
**கரவெட்டி, பருத்தித்துறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
08
-
07
-
1944

உதிர்வு
08
-
03
-
2019

அமரர் கணபதிப்பிள்ளை நவரத்தினம்

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு
நாம் ஆழ்ந்த துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு,
ஆத்மா ஈடேற்றம் வேண்டி
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விக்னேஸ்வரன் குடும்பம் (லண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
08 - 07 - 1944

மறைவு
08 - 03 - 2019

அமரர்

## கணபதிப்பிள்ளை நவரத்தினம்

முத்தமிழ் உதிரும் உன்
முறுவலைக் காண்பதெங்கே
வித்தகன் பகரும் உன்
பைந்தமிழை கேட்பதெங்கே
நித்தமும் வாசல் வரும் உன்
திருவுருவைக் காண்பதெங்கே
நித்தியமாகி உறையும் உன்
தேவலோகம் வந்திடவோ

உற்றார் உறவினர் உன் பிரிவுகண்டு
உறைந்து நிற்கின்றார்
தமிழ்த்தாய் தன் தனயன் பிரிவுகண்டு
தளர்ந்து நிற்கின்றாள்
மனைவி மக்கள் உன் மறைவுகண்டு
மயங்கி நிற்கின்றார்
தேவர்கள் உன்வரவுகண்டு
துள்ளிக் குதிக்கின்றார்.


அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயரில் பங்குகொள்ளும்...
**Science Centre**
**Point Pedro.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவரலாறு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

பாசமிகு குடும்பத் தலைவனாய், பல்லோரும் பாராட்டும் நல்லாசானாய், பலரும் போற்றவல்ல வழிகாட்டியாய் பாரிலே வாழ்ந்து, எமக்கு வழிகாட்டிய எம் அன்புத் தெய்வம் அமரர் கணபதிப்பிள்ளை நவரத்தினத்தின் பிரிவுத் துயரைத் தாங்கிக் கொள்ளும் வலுவைத் தந்த இறைவனுக்கு முதலில் எமது நன்றிகள்.

அன்னார் திடீரென நோய்வாய்ப்பட்டபோது அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற நண்பர்கள், அயலவர்கள் ஆகியோருக்கும், நொதேன் வைத்தியசாலை, யாழ் போதனா வைத்தியசாலை ஆகியவற்றின் வைத்தியர்கள், ஊழியர்களுக்கும் எமது நன்றிகள்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளைச் செவ்வனே நடத்திய சம்பந்தக் குருக்களுக்கும், அஞ்சலிப் பதாதைகள், மலர் வளையங்கள் மற்றும் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும், இறுதி ஊர்வலத்திற் கலந்து கொண்டோருக்கும் எமது நன்றிகள்.

அன்னாரின் சாவுச் செய்தியறிந்து தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும், முகப்புத்தகங்களிலும், இணையத் தளங்களிலும் அஞ்சலி தெரிவித்தோருக்கும் எமது நன்றிகள். 09.04.2019 அன்று நடைபெறடற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மதியபோசன விருந்தூட்டிலும் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

அமரர் மீது கொண்ட பாசத்தால் "நவாஞ்சலி" என்ற இம்மலருக்கான நினைவுப் பதிவுகளை அனுப்பி வைத்த அனைவருக்கும், மலரைத் தொகுத்து உதவிய ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.வ.செல்வராசாவுக்கும், மலரை அழகுற அச்சிட்ட தமிழ்ப்பூங்கா பதிப்பகத்தினருக்கும் எமது நன்றிகள்.

இங்ஙனம்

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org